காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

20-2-72

★

உள்ளே......

பொருத்தமான சந்தர்ப்பம்! (தலையங்கம்)

அரசப்பர் ஆணை

எதையும் எதிர்ப்போரே! இதுவா அரசியல்!! (கட்டுரை)

வழக்குமன்றத்தில் விலங்குகள்!

நம்பிக்கை (சிறுகதை)

விலை 25 காசு

வங்கமெனும் பெண்ணே!

— பாவலர் கருமலைப் பழம்நீ —

பாக்கிஸ்தான் படைகோட்டை 'டாக்கா' மீது
பக்கத்துணை, துப்பாக்கி யேதும் இன்றி
நோக்காமல் விமானத்தில் 'திவான்' என்போன்
நோக்கெல்லாம் வெற்றியுற பறந்தான் அன்றோ?

உள்ளமிலார் வாழ்மேற்குப் பாக்கிஸ் தானில்
உணர்ச்சியுடன் செல்லுங்கால், நெஞ்சை நோக்கித்
துள்ளிவரும் குண்டேந்தி, பகைவி மானம்
தூளாகச் சுட்டானே சாவ்லி' என்போன்!

குற்கியெனும் நம்கப்பல் தீயோர் போட்ட
குண்டாலே வெடிப்புற்று மூழ்கும் போது
அற்புதமாய் அங்கிருந்தோர் தப்பச் செய்து
ஆழ்ந்தானே கப்பலுடன் 'கேப்டன் முல்லா!'

குண்டாலே மண்டையைப் பிளந்த போதும்
குன்றாமல் பகைவிமானம் சுட்டு வீழ்த்தி
கண்முன்னே எரிந்தழிய கண்டு சாய்ந்த
காளையவன் 'ஆறுமுகம்' வீரன் அன்றோ?

செங்களத்தில் பகைவெல்ல உயிர்து றந்த
செம்மல்களை சிங்கத்தாய் பெற்றாள் அன்றோ?
வங்கமெனும் பெண்ணே! நீ வாழ்நா ளெல்லாம்
மறக்காமல் அவர்பேரை நிறுத்து நெஞ்சில்!

திருடனும் தேளும்

காலை மணி ஒன்பதாகி விட்டது.

அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன்.

"சித்ரா, பேனாவை எங்கே காணோம்?"

அலுவலகத்துக்குப் போகத் தாமதமாகிறதே என்ற கவலை ஆத்திரமாகப் பரிணமித்து, என் மனைவி சித்ராவை நோக்கிப் பாய்ந்தது.

சமையலறையிலிருந்து வந்த சித்ரா மேஜையைத் துழாவத் துவங்கினாள்.

எனக்கோ பொறுமை இல்லை.

"மேஜையில் இல்லைன்னு தெரியும் எனக்கு. நீ ஏதாவது சலவைக் கணக்கு, மோர்க் கணக்கு எழுத எடுத்தியான்னுதான் கேட்டேன்......"

என் சீறல் முடிவதற்குள் மேஜைக்குக் கீழே விழுந்துகிடந்த பேனாவைச் சுட்டிக் காட்டினாள் சித்ரா.

பேனாவை எடுத்துக் கொண்டு கிளம்பும் சமயம்.

சித்ரா தயக்கத்துடன் என்னைப் பார்ப்பது புரிந்தது.

"என்ன?"

"ஒண்ணுமில்லே, சின்னவள்—திலகம்—நேற்று கீழே விழுந்து வளையலை உடைத்துக் கொண்டு விட்டாள். அவளுக்கு வளையல் வாங்கிப் போடணும். இன்னிக்கு அழுதுகிட்டேதான் பள்ளிக்கூடம் போயிருக்கா......இரண்டு ரூபா கொடுத்திங்கன்னா தேவலை..."

"உம், அப்புறம்?"

"குழந்தை கண்ணனுக்கு ஹார்லிக்ஸ் இல்லை."

"மாதக் கடைசின்னுதான் தெரியுமே, ஏன் இந்த பட்ஜெட்டெல்லாம் இப்போ?"

நான் சொல்லி முடிக்குமுன் என் பிள்ளைச் செல்வம் — வயது பதினேழு; கல்லூரியில் காலெடுத்து வைத்து நாலு மாதமாகிறது; திருநாமம் முரளி — குறுக்கிட்டான்.

"அப்பா; இன்னிக்கு ஃபிஸிக்ஸ் ரெகார்டு நோட்டு வாங்கணும். மூன்று ரூபா தர்றீங்களாப்பா?"

"இந்தா, மூன்று ரூபாய். இதுக்கு வளையல்தான் வாங்குவியோ, ஹார்லிக்ஸ்க்குப் பதிலா ரொட்டிதான் வாங்குவியோ, இல்லே உன் பிள்ளைக்கு ரெகார்டு வாங்கதான் கொடுப்பியோ எனக்குத் தெரியாது. இந்த மாதத்துக்கு இதுதான் கடைசிப் பணம் நம்ம பையிலே......" என்றவாறே சித்ராவை நோக்கி ரூபாயை வீசிவிட்டுக் கிளம்பினேன், அலுவலகத்துக்கு.

அதே தினம்.

மாலை ஐந்தரை மணி.

அலுவலகத்திலிருந்து நடந்தே வந்துகொண்டிருந்தேன்.

ஒரு தியேட்டர் வாசல்.

வெளியில் ஒரே நெரிசல்; க்யூ மயம்.

"என்ன படமாக இருக்கும்?" நிமிர்ந்து பார்த்தேன்.

'ஸ்காண்டி நேவியாவின் சரச ராணிகள்!'

— இளவரசி —

'தி விமன் இன் ஸ்காண்டி நேவியா' என்ற ஆங்கிலப் படத் தலைப்பு தமிழில் 'சரச'மாக மொழி பெயர்க்கப்பட்டிருந்தது!

"நகரத்தின் ஒரு மூலையில் 'ஆபாச சுவரொட்டி' ஒழிப்புப் போராட்டம் நடத்தப்பட்டாலும் இதோ நகரத்தின் மற்றொரு மூலையில் ஆபாசப் படங்களைப் பார்க்க எவ்வளவு பேர் இருக்கிறார்கள்!" என்று பெருமிதப்பட்டுக் கொள்ளுவதுபோல, முக்கால் நிர்வாணத்திலிருந்த ஸ்காண்டி நேவிய சரச ராணிகள் மயக்கப் பார்வையை வீசிக்கொண்டிருந்தனர்.

ராணிகளின் போஸ் என்னையும் மேலே நடக்கவிடவில்லை.

நாற்பது வயது ஆனால் என்ன? பாலுணர்ச்சிக்கு மனிதன் விதிவிலக்கா என்ன? மனம் ஆசை கொண்டது. ஆவலைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

காலையில் சித்ராவிடம் 'மாதக் கடைசிப் பணம்' என்று சொல்லி மூன்று ரூபாயை வீசினாலும், இன்னும் என் பையில் இருந்த ஐந்து ரூபாய் நோட்டொன்று அந்த 'அடல்ட்ஸ் ஒன்லி' படத்தைப் பார்க்கத் தூபம் போட்டது.

"மாதம் பிறக்க இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்றனவே!" என்ற மனப் போராட்டத்தையும் வென்று, கால்கள் கவுண்ட்டரை நோக்கிச் சென்றன.

படத்தில் ஸ்காண்டி நேவிய 'ராணி'கள் ஆடினார்கள், இந்நாட்டு மன்னர்கள் தியேட்டர் இருளில், மயக்கத்துடன் ஆடினார்கள்.

படம் ஒன்றரை மணி நேரந்தான். இல்லாவிட்டால் 'அந்த'ப் படத்துக்குத்தான் என்ன மதிப்பு?

உள்ளமும் உடலும் ஏதோவொரு கற்பனை உலகுக்குச் சென்று மீண்டதால் சோர்வுற்ற உணர்வுடன், புதிதாக அப்போதுதான் நடை பயிலக் கற்றவர்போல. தியேட்டரிலிருந்து வெளியே வந்தவர்களுள் நானும் ஒருவனானேன்.

என்னை இடித்துத் தள்ளிக் கொண்டு யாரோ செல்லவே கோபத்துடன் தலை நிமிர்ந்தேன்.

என் முன்னே சென்ற ஆளைப் பார்த்ததும்—

ஆயிரம் தேள்கள் ஒன்றாய்ச் சேர்ந்து கொட்டியதைப்போலிருந்தது எனக்கு!

ஆம்; என் புத்திர சிகாமணிதான் என் முன்னே சென்று கொண்டிருந்தான்!

கூப்பிட்டு, நாலு அறை அறையலாமா என்று யோசித்தேன். ஆனால், அடுத்த கணமே, அது முடியாதென்பதை உணர்ந்தேன்.

கொட்டிய தேள் திருடனையல்லவா கொட்டியிருக்கிறது! எப்படிக் கத்த முடியும்?

"ரெகார்டுக்குக் காசு வாங்கிக் கொண்டு இங்கே வந்து 'அடல்ட்ஸ் ஒன்லி' படம் பார்த்துவிட்டுப் போகிறானே!" என்று ஆத்திரப்பட்ட என்னை அடக்கியது ஏதோவொன்று.

"காலையில் சித்ராவிடம் பணமில்லை என்று சொல்லிவிட்டு நானும்தான் 'அடல்ட்ஸ் ஒன்லி' பார்த்துவிட்டுத் திரும்புகிறேன்!" என்ற நினைப்புதான் அந்த ஏதோவொன்றோ?

என் கண் முன்னே, மனைவி சித்ராவின் முகமும், மகள் திலகத்தின் வளையிழந்த கரங்களும், உணவின்றிக் கத்தும் குழந்தை கண்ணனின் உருவமும் தோன்றின.

புதியதொரு முடிவு கொண்டவனாய், வேகமாக நடைபோட்டேன் வீடு நோக்கி. *



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 20—2—72 | இதழ் 32

பொருத்தமான சந்தர்ப்பம்!

1971-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்பிருந்த மனநிலையில் இன்றைக்கு இந்தியப் பிரதமரால் இருக்க முடியாது என்பதற்கான காரணங்கள் வெளிப்படையாகவே தெரிகின்றன.

மத்தியில் ஒரு வலுவான ஆட்சிதான் இருக்க வேண்டும் என்பதிலே எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது என்பதைப் போலவே, தி. மு. கழகத்துக்கும் அந்த மனநிலை கிடையாது என்பதை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் திட்டவட்டமாக எடுத்துக் காட்டியிருக்கிறார், சட்ட மன்றக் கூட்டங்களில் மட்டுமல்லாது, பொதுமேடைகளின் மூலமும்.

1967 வரையிலும், அனைத்திந்திய மட்டத்தில் ஒரு கட்சி ஆட்சிதான் மத்தியிலும், மாநிலத்திலும் இருந்து வந்தது. சுமார் 20 ஆண்டுக் காலம் அந்த நிலை நீடித்த பிறகுதான், ஒன்பதுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் அப்போது தனிக் கட்சிப் பெரும்பான்மை ஒழிக்கப்பட்டது என்பதையும், அதன் பிறகுகூட நடைபெற்ற மாநிலத் தேர்தல்கள் ஒரு கட்சி நிலைமைக்கு எதிராகத்தான் இருந்தன என்பதையும் திட்ட வட்டமாக எடுத்துக்காட்டி வந்திருக்கிறது.

ஒரு தேர்தலின் மூலம், ஆளுங் கட்சியொன்று தோற்கடிக்கப்பட்டு, புதியதொரு கட்சி ஆளும் பொறுப்புக்கு அழைக்கப்படுகிறது என்றால் அது மக்களது தீர்ப்பு என்பதை சராசரி அறிவுள்ளவர்கள் கூட புரிந்துகொள்ள முடியும்.

1971-க்கு முன்புகூட இப்போதைய இந்திரா காங்கிரஸ் என்ற அமைப்பு முழுமையாக இயங்க முடியாத நிலை இருந்தது என்பதும், 1971 தேர்தலுக்குப் பிறகுதான் மத்திய அரசின் ஸ்திரத் தன்மைக்கு மக்கள் கரங்கள் ஒருங்கிணைந்தன என்பதும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

அதன் காரணமாகவே. மத்திய அரசின் ஸ்திரத் தன்மைக்கு என்று மக்கள் காட்டியிருக்கும் ஆதரவை தம் கட்சிக்குத் தரப்பட்ட முழுமையாக ஒப்புதல் என்கிற ரீதியில் பிரதமரின் இன்றைய எண்ணங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன என்பதை,

"தினசரி வாழ்க்கையில் மக்களுடன் தொடர்பு கொண்டு இருப்பது மாநில அரசுகள் தான்."

எனவே, டெல்லி சர்க்காரின் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால்—

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே ஆட்சிதான் இருக்கவேண்டும்,

என்கிற ஹூப்ளி நகரப் பேச்சு புலப்படுத்திக் காட்டுகிறது.

அடுத்த திங்கள், பதினொன்கு மாநிலங்களுக்கான பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் இவ்வாறு பேசி இருப்பது வாக்காளர் பெருமக்களை அச்சுறுத்துகிறார் என்றுதான் பொருள்படும்.

அது மட்டுமல்லாமல், ஆளுங் காங்கிரசுக்கு வாக்காளர்கள் வாக்களிக்காவிட்டால், தேர்ந்தெடுக்கப்படும் வேறோர் கட்சியின் ஆட்சியினை மத்திய அரசு ஏற்காது என்றோ, அன்றி அதனுடன் முழு அளவுக்கு ஒத்துழைக்காது என்றோ கூறுவதாகவும் பொருள் தருகிறது அந்தப் பேச்சு,

இருபதாண்டுக் கால அநுபவத்துக்குப் பிறகு, ஒரு கட்சி ஆட்சிக்கு சாவு மணி யடித்துவிட்ட பின்னர், வலுவான மத்திய அரசு தேவை என்ற காரணத்தை உணர்ந்து அறுதிப் பெரும்பான்மை ஒரு கட்சிக்கு நல்கப்பட்டிருக்கும் வாய்ப்பினை தவறான காரியத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முனைகிறார் பிரதமர் என்றே கருதவேண்டியிருக்கிறது.

மத்தியில் வலிவு இருக்கவேண்டும் என்பதற்கும், மாநிலத்தின் மத்திய அரசின் கட்சிதான் ஆட்சி புரியவேண்டும் என்பதற்கும் தொடர்பு இருக்க முடியாது, இன்றைய அறிவு வளர்ந்த சமுதாயத்தில்.

எனவே, நாடு முழுவதும் ஒரு கட்சிதான் இருக்கவேண்டும் என்ற பேச்சின் மூலம், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தன்னை ஒரு சர்வாதிகாரி என்ற நிலைக்கு உயர்த்திக்கொள்ள நினைக்கிறாரோ என்று நல்ல நெஞ்சங்கள் கவலைப்படவே செய்யும்.

ஆகவேதான் பிரதமர் போன்றவர்களுக்கு இந்த எண்ணத்தையும், போக்கையும் நீக்கவல்ல மாமருந்தாக அமைகிறது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்ற கோரிக்கை.

இக்கோரிக்கையின் ஆழத்தை இச்சந்தர்ப்பத்தில் இணைத்துப் பார்ப்பது சாலப் பொருந்துவதாகவும் இருக்கும்.

—திருவாரூர் - முத்துராமன்.

"காஞ்சி"

(கிழமை இதழ்)

16—1—'72-ஆம் நாள் முதல் 'காஞ்சி' இதழ் வெளிவரவில்லை என்பதையும், பொங்கல் மலருக்குப்பிறகு இரண்டு கிழமைகளுக்கு அலுவலகத்துக்கு விடுமுறை ஆதலால், 13—2—'72 ஆம் நாள் முதல்தான் 'காஞ்சி' தொடர்ந்து வெளிவருகிறது என்பதையும் எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் அறிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்,

'காஞ்சி'

காஞ்சிபுரம்-3.

சங்க காலக் கவிஞர்-பரணர்

(மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.)

தலைநிமிர்ந்து தமிழ்அன்னை வளர்ந்த காலம்
தமிழ்மண்ணில் தன்னாட்சி தழைத்த காலம்
கலைமிகுந்து வளஞ்சிறந்து மிளிர்ந்த காலம்
கனித்தமிழர் நாகரிகம் ஒளிர்ந்த காலம்
நிலைகுலையா முடிமன்னர் ஆண்ட காலம்
நெடும்புவியில் தமிழரசு நிலைத்த காலம்
மலைநிகர்த்த தமிழ்மறவர் வாழ்ந்த காலம்
மாப்புலவர் பலர்வாழ்ந்த சங்க காலம்!

தமிழ்நாட்டில் தமிழுக்கே எதிர்ப்புக் காட்டும்
தரங்கெட்ட கூட்டத்தார் வாழாக் காலம்!
தமிழ்த்திணிப்பா? எனக்கேட்கும் சகுனிக் கும்பல்
தமிழ்வெறுப்பை வளர்ப்பதற்கு முனையாக் காலம்!
இமிழ்கடல்சூழ் வையத்தில் தமிழ்பழித்தால்
இடுப்பொடியக் கல்சுமக்கச் செய்த காலம்!
அமிழ்தனைய செந்தமிழைக் கற்றோர் கூட்டம்
அகமகிழ்ந்து வாழ்ந்தகாலம் சங்க காலம்!

மணத்தாலே பூவுக்குப் பெருமை; கற்பு
மாண்பாலே பூவைக்குப் பெருமை; நல்ல
குணத்தாலே சான்றோர்க்குப் பெருமை; கொண்ட
கொள்கையினால் நாட்டுக்குப் பெருமை; ஓங்கும்
மனத்தாலே புலவர்க்குப் பெருமை; அன்னார்
மதிஈந்த பாட்டாலே பெருமை பெற்ற
இனத்தாலே எல்லோர்க்கும் பெருமை என்னும்
இலக்கியத்துப் பொற்காலம் சங்க காலம்!

பழிகூறி ஒதுக்கிடவே முனைந்திட்டாலும்
பச்சோந்தி யாய்மாறும் பழக்கம் இல்லை!
விழியுருட்டிப் பகைவந்து மிரட்டினாலும்
விவேகத்தை விலைபேசும் நிலைதான் இல்லை!
வழிதவறிச் செல்லுகின்ற வழக்கம் இல்லை
வாய்மையிலாப் புலவர்க்கோ வேலை இல்லை!
கழியுவகைக் கடலினிலே தமிழ்க் கலத்தில்
கவின்புலவர் மிதந்தகாலம் சங்க காலம்!

சிறுமைநிலை அன்றில்லை; குறிபறிக்கும்
சிறுநரியின் செயலில்லை; வஞ்சகத்தால்
ஒருவரையும் மற்றொருவர் கெடுப்பதில்லை;
உதட்டளவு நட்புக்கு விலையே இல்லை!
பெருமைமிகு தமிழ்மொழியை இகழ்தல் என்னும்
பேச்சுக்கே இடமில்லை அக்காலத்தில்!
வறுமையிலே உழன்றாலும் மானத்தோடு
வாழ்ந்தவரே சங்ககாலப் புலவர் ஆவார்.

பாரியெனும் பறம்புமலைக் கோமான் போலப்
பலர்வாழ்ந்த பொற்காலம் சங்க காலம்!
ஆரியத்தைப் புறங்கண்ட அக்காலத்தில்
அந்தணராம் அறவோரில் சிறந்தோராகச்
சீரியசெந் தமிழ்க்கவிதை வடிப்போராக
திகழ்ந்தவரே! பாணர்எனும் நல்லார்; அன்னார்
மாரியைப்போல் கவிபொழிய வல்லார்; நாடு
மதிக்கின்ற கபிலருக்கு நண்பர் ஆவார்!

சீரிதயம் பெற்றவராம்; புலமை விஞ்ச
செந்தமிழைக் கற்றவராம்; பதிற்றுப் பத்தில்
சீரியஐந் தாம்பத்தில் சேர மன்னன்
சிறப்புக்களை வடித்தவராம் பரணர்; ஈடாய்ச்
சேரநாட்டின் பகுதியான உம்பற் காட்டைச்
சேரஇள வரசோடு பெற்ற செம்மல்!
கூரியநல் லறிவோடு வரலாற் றின்நல்
குறிப்புகளைத் தந்தவரும் அவரே ஆவார்!

ஆற்றோடு வந்தகனி எடுத்த பெண்ணை
ஆயாமல் கொலைசெய்தான் நன்னன்; அந்தோ!
நாற்றங்கால் காப்பவனே அதைஅழித்தால்
'நாற்று' நிலை என்னாகும்? காக்கும் மன்னன்
மாற்றமுடன் மக்கள்உயிர் கவர்ந்தால் நாட்டு
'மக்கள்நிலை' என்னாகும்? எனநினைந்தே
ஏற்றபல இடங்களிலே நன்னன் செய்த
இழிசெயலைச் சாடியவர் பரணர் ஆவார்!

காதலிக்கத் தெரிந்தவரும் உண்டு; பின்பு
கைகழுவ நினைப்பவரும் உண்டு; பெண்ணைப்
பேதலிக்கச் செய்பவரும் உண்டு; காதல்
பெருமையிழந்(து) உழல்வதுவோ இந்தக் காலம்!
சாதலுக்கும் அஞ்சாமல் காதல் செய்த
சரித்திரத்தைப் பெற்றதுவோ அந்தக் காலம்!
ஆதிமந்தி ஆட்டனத்தி காதல் பற்றி
அகப்பாட்டில் சொன்னவர் யார்? பரணர் தானே!

வையாவிக் கோப்பெருநல் பேகன் என்பான்
வடிவழகி கண்ணகியைத் தவிக்கவிட்டுப்
பொய்யாவி முயக்கத்துப் பரத்தை யோடு
போய்ச் சேர்ந்தான்; வாழ்ந்தான்; ஆம்!
பழியில் வீழ்ந்தான்!
மெய்யாடை மயிலுக்குப் போர்த்த வள்ளல்
மெய்யான 'மயில்'வாட வாழக் கண்டே
'ஐயோ'என்(று) அலறியது பரணர் உள்ளம்!
அக்காலப் புலவர்உளம் அதுதான் ஐயா!!

மலையமானை வெற்றிகொண்ட அதியன்அஞ்சி
மறம்தன்னைப் பரணன்போல் பாடியோர் யார்?
தலைசிறந்த மூதாட்டி ஔவைப் பாட்டி
தன்பாட்டில் பரணன்சீர் பாடுகின்றார்!
விலைமதிக்க முடியாத குறளை வாழ்த்தி
வெண்பாஒன்(று) அருளியவர் பரணர்; அன்னார்
கலைசிறந்த தமிழகத்துக் கவிவானத்தின்
கவின்நிலவு; தண்கவிதை பொழியும் கொண்டல்!!

(30—1—72 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை வகுப்பு வெள்ளிவிழாக் கவியரங்கில் பாடியது.)

★

அரசப்பர் ஆணை

— லிடியா —

ஆலையூர் அரசப்பர், அரசுக்கு எப்போதும் நல்ல பிள்ளையாக நடப்பவர். அரசு எள்ளுக்கு வரி போட எண்ணிக்கொண்டு இருக்கும்போதே, இவர் எண்ணெய் விலையை ஏற்றும் ஏழைப் பங்காளர். (ஏழைகளின் பங்கையும் ஆள்பவர்) அரசின் உதவியுடன் நடக்கும் பல தொழிற்சாலைகளைத் தனியார் துறையில் நிறுவி நடத்துகின்றவர். தோல், கடலை ஏற்றுமதித் தரகர், இன்னபிற. அரசை எப்போதும் அப்பிக்கொண்டே இருப்பார் என்றுதானோ என்னவோ, இவரது பெற்றோர் இவருக்கு 'அரசப்பர்' எனப் பெயரிட்டுள்ளனர்.

ஆலையூரில்தான் 'அரசப்பர்' தொழில் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் இருக்கின்றது. அரசப்பர் அன்று அலுவலகத்தில் தம் தனி அறையில் இருந்தார். அலுவலக வளைவுக்குள் சிற்றூர்தி ஒன்று நுழைந்தது. வெண்ணிறச் சிறுகுல்லாயும் வெள்ளுடை உடுத்த வருமாய் ஒருவர் அதிலிருந்து இறங்கினார். அரசப்பரின் தனியறைக்குள் சென்றார். இருவரும் அரைமணி நேரம் தனித்துப் பேசினர். வந்தவர் சென்றுவிட்டார்.

அ. தொ. நி. தலைமை அலுவலகத்திலிருந்து எல்லாக் கிளை அலுவலகங்களின் மேலாளர்களுக்கும் அரசப்பரின் கையொப்பத்துடன் மறைவடக்கமான ஆணையொன்று அனுப்பப்பட்டது. விடுதலை இயக்கத்துடன் தொடர்புகொண்டுள்ள ஊழியர்களையும், அதில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்கம் காட்டிவரும் ஊழியரையும் அலுவலகத்திலிருந்து நீக்கிவிடும்படி அவ்வாணை கூறிற்று. வலுக்கட்டாயமின்றி, கூடுமானவரை தாங்களாகவே விலகிச் செல்லும் நிலையை "எப்படியாவது" உண்டு பண்ணும்படி மேலாளர்களை அவ்வாணை கேட்டுக்கொண்டது.

சோலையூர் அ. தொ. நி. கிளை அலுவலக மேலாளர் தன் அலுவலக அறையில் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். அரசப்பரின் அஞ்சல் பிரித்தபடி இருந்தது. விசிறியின் சுழற்சியால் எழுந்த மென் காற்றில், அரசப்பரின் ஆணையின் ஒரு மூலை படபடவென்று அடித்துக் கொண்டது. மேலாளர் மேகவர்ணம் மணியை அழுத்தினார்...... 'தாங்களாகவே விலகிச் செல்லும் நிலையை "எப்படியாவது" உண்டு பண்ணும்படி......' என்ற வரிகள் அவரை உறுத்தின. யாரை முதலில் நெருக்குவது? என்று எண்ணிக்கொண்டிருந்தார். பணியாள் உள்ளே வந்தான். ஒன்றுமில்லை! நீ போகலாம்! என்றார். பணியாள் வெளியில் சென்றுவிட்டான். விடுதலை இயக்கத்தின் விறுவிறுப்பு நாட்டு மக்களின் உள்ளத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதையும், தன் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் எத்தனை பேர் அவ்வியக்கத்தில் பற்றும் பரிவும் கொண்டவர்கள் என்பதும் மேலாளருக்கு நன்கு தெரியும். அவரைப் பொறுத்தவரை தன் எசமானரைத் தவிர வேறு எதிலுமே பற்றில்லாதவர். இயக்கப் பற்றுள்ள ஒவ்வொரு ஊழியரையும் மனத்திரையில் கொண்டுவந்தார். இதுவரை அவர்களில் ஒருவருக்கும் இவர் இடைஞ்சல் செய்ததில்லை. இப்பொழுதும் இடைஞ்சல் செய்ய எண்ணமில்லை. ஆனால்; அரசப்பரின் ஆணை ஆடிக்கொண்டிருந்தது. அஞ்சல்கள் பதிந்தனுப்பும் எழுத்தன் 'செங்கதிர்' இயக்கப் பற்றுள்ளவன். விடுதலை இயக்கத்தில் முழு நம்பிக்கையுடன் இருப்பவன் செங்கதிர். மேலாளரின் எண்ணத்தில், செங்கதிர் ஒரு நல்ல கடவுளன்பன். ஏனென்றால் முதன் முதலாக இவ்வலுவலகத்தில் வேலை தேடிக் கையில் விண்ணப்பத்துடன் வந்த செங்கதிரை மேலாளர் தேர்ந்தெடுக்கும்பொழுது தெய்வ நம்பிக்கை பற்றி அவனைக் கேட்டதற்கு, தன் கையிலுள்ள வேலை விண்ணப்பம் கூடக் கடவுள் தனது கனவில் சொன்னபடி எழுதியதுதான்' என்று கூறினவன் செங்கதிர். கடவுளிடம் உள்ள பற்றினைப் போலவே, நாட்டிடமும் பற்றுக் கொண்டவன் என்று எண்ணினார் மேலாளர். அவனையே முதலில் கலக்க முடிவு செய்தார். மேகவர்ணத்தின் 'அலுவலர் நீக்கும் படலத்தில்' முதலில் தோன்றிய பாத்திரம் செங்கதிர். அவர் விரல் மணியை அழுத்தியது. பணியாள் வந்தான். 'டெஸ்பாட்சர்' செங்கதிரை வரச்சொல்!' என்றார்.

"ஓ......செங்கதிர்! உட்கார்!"

அவன் தயங்கினான். அவன் சாமானியன்; அஞ்சல் பதிந்தனுப்பும் எளியன். அலுவலக மேலாளர் அவர். ஆக்குவார்; அழிப்பார். அவர் எல்லாம். அவன் தயங்காமல் என்ன செய்வான், அதுவும் அவரது அறையில்.

"பரவாயில்லை! உட்கார்!", மீண்டும் சொன்னார் அவர். தெளிவாகவும் உறுதியாகவும் கட்டளையிட்டதுபோலிருந்தது அவர் குரல். செங்கதிருக்கு உட்கார்வதே சரியெனப்பட்டது; என்றாலும் சற்றுக் கூச்சமும் அச்சமும் இருந்தது.

"செங்கதிர்! உன்னை நான் குற்றம் சாட்டுவதாக நீ எண்ணவேண்டாம். நானும் அப்படிச் செய்ய விரும்பவில்லை, ஆனால், அடிக்கடி உன் வேலை அரைகுறையாகவே நின்று விடுகிறது. கடிதங்கள் எல்லாம் எழுதப்பட்ட அன்றே அனுப்பப்படுவதில்லை என அறிகிறேன்..."

"ஐயா! நான் மிகவும் கடுமையாகத்தான் உழைக்கிறேன்."

"ஆம்! நீ உழைப்பது எனக்குத் தெரியும். சீக்கிரமே இங்கு வருகிறாய்; பகல் உணவு வேளையில் கூட வேலை செய்கிறாய்; சில நாட்களில் இரவு ஒன்பது மணிவரையிலும் நீ வேலை செய்வதை அறிகிறேன்; வருத்தப்பட்டு உழைக்கிறாய்; இருந்தும்உன் பணியை நீ முடிப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு குறை உன்னிடம் இருக்கிறது. ஒரு வேளை உனக்கே அது தெரியலாம்."

"ஆம் ஐயா! அதுஎன்னவென்று நான் அறிவேன்!"

"அப்படியானால் நீ என்னிடம் சொல்லலாம். என்னால் முடிந்த எந்த உதவியையும் நான் செய்வேன்."

"அதாவது ......அதாவது ......" என்று செங்கதிர் சொற்களை விழுங்கினான். சற்றுக்குழப்பத்துடன் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான். "அதாவது அது என்னுடைய தலைவிதிதான் ஐயா!" என்று சற்று உரத்த குரலில் கூறினான்.

மேலாளர் திணறினார். அவர் முதல் முயற்சி தோல்விப் பள்ளத்தில் இறக்கியது அவரை. ஆனாலும் அவர் பணியை அவர் செய்தாக வேண்டுமே! அரசப்பரிடம் நற்பெயர்பெற வேண்டுமே! செங்கதிரைப் போன்றவர்களிடத்தில் சற்றுப் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தார்.

"நீ கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது செங்கதிர். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதை எல்லோரும் ஒப்பமாட்டார்களே! கடிதங்கள் எல்லாம் எழுதப்பட்ட அன்றே அனுப்பப்படுவதில்லையே, ஏன்? என்று தலைமை அலுவலகத்திலிருந்து எனக்கு விளக்கம் கேட்டு எழுதினால், 'சோலையூர் கிளை அலுவலகத்தின் தலைவிதிதான் காரணம்' என்று நான் விளக்க முடியுமா? விளக்கித் தப்பிக்க முடியுமா? அவர்கள் அதைப் புரிந்துகொள்வார்களா? ஒப்புவார்களா? அதிலும் இப்பொழுதுள்ள தலைமை அலுவலகப் பொதுத் தலைவர் அவ்வளவு உயர்ந்தவர் என்று கூற முடியாது! என்ன செங்கதிர்?"

"ஐயா, அப்படிச் சொல்லாதீர்கள்! எல்லா மனிதர்களும் உயர்ந்தவரே; சிறந்தவரே!" பட்டென்று கூறினான் செங்கதிர்,

"அது சரி! உண்மைதான். ஆனால் மிக உயர்ந்தவரும்கூடச் சில வேளைகளில் மிகத் தாழ்வான — கசப்பான—காரியங்களைச் செய்யவேண்டியவர்களாகி விடுகின்றார்கள், அல்லவா! தங்களுடைய இயற்கைத் தன்மைக்கும் மீறி நடக்க வேண்டி வருகின்றது. நமது கிளை அலுவலகம் முறைப்படி இயங்கவில்லை என்று இதை மூடிவிடவும் அவர் எண்ணலாம். உன்னால் நாற்பது பேர் பணி இழக்க வேண்டுமா? மற்றவர்கள் எங்கு போய் வேலை தேடுவார்கள்?" மேலாளர் மேகவர்ணம் செங்கதிரைக் கூர்மையாய்ப் பார்த்தார். தன் சொற்கள் வேலை செய்வதை உணர்ந்தார். மீண்டும் பேசினார். "என்னையே எடுத்துக் கொள்! வரும் சனவரித் திங்களில் எனக்கு அறுபது வயது ஆகும்; எனக்கு யார் வேறு வேலை கொடுப்பார்கள்?"

"உங்களை எவரும் வேலைக்குச் சேர்த்துக்கொள்வார்கள்! நீங்கள் நல்லவர், வல்லவர்!" உடனே சொன்னான் செங்கதிர். போட்டி போட்டுக்கொண்டு அவரை வேலையில் அமர்த்திக் கொள்வார்கள் என்கிற நம்பிக்கை அவன் குரலில் இருந்தது.

"நடக்காது! நான் அப்படி நினைக்கவில்லை!" சற்றுச் சோர்வுடன் கூறினார் மேகவர்ணம்.

"நீங்கள் எண்ணுவது தவறு! நான் உங்களுக்கு உதவுவேன். வேலை நிச்சயம் வாங்கித் தருவேன்! எவ்வகையிலும் என்னால் முடியும்! நான் செய்வேன்!" பெரும் ஒத்துணர்வுடனும் இரக்கத்துடனும் அத்துடன் படபடப்புடனும் கூறி முடித்தான் செங்கதிர்.

இருவரும் சற்று நேரம் பேசவில்லை. செங்கதிருக்குப் படபடப்பு இன்னும் அடங்கவில்லை. மிக அவசரப்பட்டுப் பேசிவிட்டதை உணர்ந்தான். அவன் யார் ஒரு மேலாளருக்கு உதவ? என்ன வேடிக்கை! என்ன கோமாளித்தனம்! எல்லாம் அறிந்த வயது நிறைந்த மேலாளர் முன் அவனது ஏழ்மைப் பேச்சை வரம்புமீறிச் சொல்லிவிட்டானே! மேலாளருக்கு மட்டுமல்ல; சோலையூர் கிளை அலுவலக ஊழியர் எல்லோருக்குமே உதவுவதாக அவன் எண்ணம்.

"நீங்கள் சரி என்று உத்தரவு கொடுத்தால், இவ்வாரமே செல்கிறேன் ஐயா! நம் கிளை அலுவலகத்தின் நன்மைக்காகச் செல்கிறேன்."

அவனுடைய துணிவையும் ஆர்வத்தையும் நன்றாய்க் கண்டார் தலைவர். "சரி! மிகவும் நல்லது! உன்னுடன் உள்ள ஊழியர்களின் நல்வாழ்வில் நீ அக்கறை காட்டுவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்!"

"ஆம் ஐயா! நிச்சயமாகச் செல்கிறேன். ஏழுமலையானிடமே நேராய்ச் செல்கிறேன். அவனிடம் எல்லாவற்றையும் கூறுகிறேன். நமது 'சோலையூர்—கிளை அலுவலகம் மூடப்படவேண்டாம்' என்று ஆண்டவனிடம் வேண்டிக்கொள்கிறேன். நமக்கு அவர் உதவுவார் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்."

"செங்கதிர்!" மேலாளர் மேகவர்ணம் கோபத்தால் குமுறினார். ஆனாலும் அடக்கிக்கொண்டார். செங்கதிரைப் போன்றவர்களிடம் இப்படி நடப்பது பயன் தராது என்று எண்ணினார். மிகவும் பொறுமை வேண்டும். அவனுடைய போக்கு எப்படியோ, அதன் படியேதான், அவன் நிலையிலே, அவன் வழியாகவே அவனை மடக்க வேண்டும் என்று உணர்ந்தார்.

★

'செங்கதிர் உறுதியான உள்ளம் கொண்டவன்; கடவுள் நம்பிக்கை உள்ளவன்; விடுதலை இயக்கவீரன்; என்பதை யெல்லாம் மறுமுறையும் மனக்கண்ணால் கண்டார் மேகவர்ணம். ஆம்! அவர் ஒரு புதுவழி கண்டார்; புன்னகை கொண்டார். செங்கதிர் இவ்வழியில் வீழ்வான்; விலகல் தாள் நொடியில் எழுதித் தருவான். இம்முறை நிச்சயம் தலைவருக்கு வெற்றி. தனக்குள்ளே மகிழ்ந்துகொண்டார். அழைப்பு விடுத்தார் செங்கதிருக்கு.

அண்ணா சொன்னவை!

மாணவர்கள் அரசியலிலே ஈடுபடலாமா? இந்தக் கேள்விக்கு நான் அளிக்கின்ற ஒரே பதில், எல்லாக் கட்சிக்காரர்களும் இணைந்து நின்று, மாணவர்களை அரசியலிலே ஈடுபடாமல், படிப்பிலே அவர்கள் கவனம் செல்லும் வகையில் விட்டு விட்டால், மாணவர்கள் நம்மிடமிருந்து தப்புவார்கள்; ஆகவே அனைத்துக் கட்சிக்காரர்களும் சேர்ந்து இந்த முடிவினைச் செய்வோம்.

"நேற்று இரவு என் கனவில் கடவுள் வந்தார் செங்கதிர்! நீ அதைப் பற்றிக் கேட்க விரும்பு வாய் என்று எண்ணுகிறேன்!"

அவன் சட்டென்று நாற்காலியி லிருந்து எழுந்தான். கடவுளைக் கண்ட அந்தப் பெரியவரின் அடி களில் விழுந்து வணங்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண் டான்.

'உட்கார்! செங்கதிர்! உட்கார்! நான் சொல்வதைக் கேள். கடவுள் என் கனவில் வந்தார். உன்னைப் பற்றி என்னிடம் பேசினார்!"

"என்னைப் பற்றி......என்னைப் பற்றியா ஐயா? ஆ! எவ்வளவு பெருமையான நிகழ்ச்சி." அவன் உள மிக மகிழ்ந்தான்.

மேலாளர் மேலே தொடர்ந் தார். "ஆம்! உனக்கும் எனக்கும் பெருமை தரும் நிகழ்ச்சிதான். சரி! நாம் காரியத்துக்கு வருவோம்! நீ உன் வேலையிலிருந்து விரைவில் விலகிக்கொண்டால் நல்லது என்று உன்னிடம் சொல்லும்படி கடவுள் என்னிடம் கூறினார். உன் வழியில் நான் தடைக்கல்லாக இருக்க வேண்டாம் என்றும் எனக்கு அவர் அறிவுறுத்தினர்."

"கடவுள் அப்படிச் சொன்னாரா ஐயா?"

"ஆமாம் செங்கதிர்! அவர் தமி ழிலேயே பேசினார். உன்னை அலு வலகத்திலிருந்து விலகும்படி அவர் பணித்தது முதலில் எனக்கே வியப் பாக இருந்தது. ஒரு வேளை நான் தான் சரியாய்க் கேட்கவில்லையோ என்றுகூட நான் ஐயப்பட்டேன் ......"

"கடவுளே பேசும்பொழுது நீங் கள் உற்றுக் கேட்காமலிருந்திருப் பீர்களா?" செங்கதிரின் பேச்சில் கேலிக்குறிப்பு இருந்தது.

"அவர் என்ன சொன்னார் என் பதை நான் விளங்கிக்கொள்ளாம லில்லை. என்னை அவர் தெரிந் தெடுத்து என்னிடம் வந்து உன் னைப்பற்றிக் கூறியதில்கூட எனக்கு ஐயமில்லை. அது உண்மை. "நாளையே செங்கதிர் விலக விரும் பினால், அவன் நாளையே விலகுவா னாக" என்று இதே சொற்கள் என் காதுகளில் தெளிவாகக் கேட் டன. நான் உன்னை என் இளைய தம்பிபோல் நேசிக்கிறேன் என் பதை அவர் நன்கு அறிவார்."

"நான் விலகிச் செல்லவேண்டு மென்று கடவுளே விரும்புகிறாரா?"

"ஆம்! எனக்கு வருத்தம்தான். ஆனால் அவர் சித்தம் அதுவானால் ......!"

செங்கதிர் மீண்டும் எழுந்து நின்றான். "ஐயா! நான் செல்கி றேன்; விலகல் தாள் தருகிறேன்!" என்று சொல்லி கதவுவரைசென்று மீண்டும் மேசை யருகில் வந்தான். "ஐயா' நீங்கள் நல்லவர்; மிகவும் நல்லவர்; பல நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழுங்கள்" என்று சொல்லிவிட்டு விர்ரென வெளி யேறினான்.

மேலாளர் மேகவர்ணத்துக்கு இது எதிர்பாராத வெற்றி; மாபெரும் வெற்றி. அவரும் அப் படித்தான் எண்ணினார். பதினைந்து நாட்கள் சென்றன. செங்கதிர் இன்னும் விலகல் — தாள் தர வில்லை. அப்படிச் செய்யும் அறி குறி கூடத் தென்படவில்லை. முன்னை விடக் கடுமையாகவும் நேர்மையுடனும் உழைத்தான். மேலாளரும் அவசரப்பட விரும்ப வில்லை. ஆனாலும் அரசப்பரின் அஞ்சல் அவரை உறுத்திக்கொண் டிருந்தது. ஏதாவது செய்தாக வேண்டும். அவர் மனம் அமைதி காணவில்லை. செங்கதிருக்கு அழைப்பு விடுத்தார்.

"ஐயா!"

"உட்கார்! உன் விலகல் குறித்து மீண்டும் உன்னுடன் பேச விரும்பு கிறேன்!"

"கடவுள் மறுபடியும் உங்களை நினைவுபடுத்தினாரா?"

"இல்லை!" உண்மை சொன்னார் மேலாளர்.

"ஐயா! நான் விலகிக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். ஆனால் அதில் ஒரு சிறு இடைஞ்சல் இருக் கிறது! கடவுள் என் கனவில் தோன்றி என்னிடம் கூறவில்லையே என்பதுதான்! நீங்கள் கொடுத்து வைத்தவர்; சிறந்தவர்; சீரியர். ஆனால் நான் அவரைக் காணவில் லையே தவிர, அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன். நான் எழுத வேண்டிய சிலவற்றை எழுதிக் கொள்ளும்படி அவர் என்னிடம் பேசியுள்ளார்."

'என்ன? கடவுள் பேசினாரா? உன்னை எழுதிக்கொள்ளச் சொன் னாரா? நீ என்ன உளறுகிறாய்?"

"ஆம் ஐயா! அதுதான் நான் முன்பே சொல்லியுள்ளேனே! இந்த அலுவலகத்தில் நான் கொண்டு வந்து கொடுத்த விண்ணப்பம் வேலை அவர் சொல்லி நான் எழுதி யது என்று. அவர் என் கண்களுக்கு மறைந்துகொண்டு என் காது களில் நன்றாய்விழும்படி 'டிக்டேட்' செய்தார்! நீங்கள் உத்தமர்! உங் கள் கண்ணில் அவர் பட்டுள்ளார் ......ஐயா! ஒரு ஐயம்! கனவில் அவர் தோன்றியபோது வெள் ளுடை அணிந்திருந்தாரா? இல்லை; தோலுடையுடன் தோன்றினாரா? இல்லை; உங்களைப்போல மேனாட்டு முறையில் நீண்ட காலுறை, மேல் சட்டை, தொப்பி, காலணி இவற் றுடன் காட்சியளித்தாரா? இல்லை; காந்தியார்போல், வினோபாபோல், ஏழைக்கோலம் எடுத்து நின்றாரா? இல்லை..."

"செங்கதிர்! வாயை மூடு!" மேலாளர் முகம் சினந்தது. "உனக்கு நன்மை செய்யவே நான் விரும்புகிறேன். அவ்வளவுதான்! நாமெல்லாம் கடவுளின் கைப் பாவைகள். உன் பிரச்சினை எனக்கு விளங்குகிறது. உன்வேலை மனுவை எழுதுவதற்குச் சொல்லிக் கொடுத்த கடவுள் உன் விலகல் மனுவையும் எழுதச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்! ஆனால் இப்பரந்த உலகில் அவருக்கு எவ்வளவோ பணியுண்டு. உன் சொந்த நன்மை தீமைகளில் உன் கடிதங்களை எழு தச் சொல்வதற்கு அவருக்கு நேர மேது?"

"இரண்டு நிமிட நேரம் போதும் ஐயா! அவருடைய பணியை நானும் அறிவேன். நான் ஒரு 'டெஸ்பாட்ச்' கிளார்க். எனக்குச் சுருக்கெழுத்துத் தெரியும்!"

தலைவர் சீறினார். "அப்படி யானால் நீ இப்பொழுது விலக முடியாது என்கிறாயா?"

"கடவுளின் துணைக்காகக் காத் திருப்பது நல்லது என்றுதான் கூறுகிறேன்."

"சரி! நான் உனக்குத் துணை செய்கிறேன்! நான் சொல்கிறேன்; நீ எழுது!"

"அது எப்படி ஐயா முறையா கும்? கடவுளின் வேலையை நீங்கள் எப்படிச் செய்ய முடியும்? இந்த வேலையை நீங்கள் செய்வது..."

"செங்கதிர்! நீ போகலாம்! பிறகு கவனித்துக்கொள்கிறேன்!" மேலா ளருக்கு மீசையில்லை என்றாலும் மேலுதடு துடித்தது.

உறுதியான உள்ளத்தைத் தாங் கிய செங்கதிர் வெளியேறிச் செல் வதை இமைக்காமல் பார்த்தார் மேலாளர்.

ஃ

காலம் மாறுகிறது; கருத்து மாறவேண்டாமா?

முதலமைச்சர் பேச்சு!

நான் கிராமப்புறங்களுக்கு அடிக்கடி கூட்டங்களுக்குச் செல்லுகின்ற நேரத்தில் என்பால் அன்பு கொண்ட அருமைத் தாய்மார்கள் 'குலவை' போடுவது என்கின்ற ஒன்றினைக் கடைப் பிடிப்பார்கள். மதுரையம்பதியில் அதைப் பழகிக் கொண்டிருக்கிற மாணவர்கள் இருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன். மாணவர்கள் எல்லாவற்றையும் கற்றிட வேண்டும். எல்லாவற்றிலும் நல்ல பயிற்சி இருந்திட வேண்டும்.

அதிலும் குறிப்பாக பழனி மாநகரத்திலே இருக்கின்ற நான்கு கல்லூரிகளுடைய மாணவர்களைப் பொறுத்த வரையில் உங்களிடத்திலே அரசியல் மாறுபாடு இருந்தாலும் — கட்சிக் கொள்கைகள் உங்களிடத்திலே வேறு வேறாக இருந்தாலும் இந்த விழாவில் வரவேற்ற மாணவ நண்பர்கள் சொன்னார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளில் நாங்கள் வேகம் காட்டாத அளவுக்கு அமைதியாக அடக்க ஒடுக்கமாக அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடிப்பதில் பழனியிலே இருக்கிற மாணவர்களுக்கு வேறு எந்த மாணவர்களும் ஈடாக மாட்டார்கள் என்று என்னிடத்திலே சொன்னார்கள்.

நான் அதை நேரிடையாகவே காணுகின்றேன். அந்த அளவுக்கு மாணவர்களிடத்தில் பண்பாட்டு உணர்ச்சியும் நாகரிக உணர்ச்சியும் யாராக இருந்தாலும் அவர்கள் யாரென்பதைவிட அவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்கள் என்ன என்பதிலே நாட்டம் செலுத்துகின்ற அந்தத் தன்மையும் — மனப்போக்கும் மாணவர்களிடத்திலே ஏற்பட்டாக வேண்டும்.

ஆண்கள் கல்லூரி — பெண்கள் கல்லூரி—செந்தமிழ்க் கல்லூரி—பண்பாட்டுக் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகளும் இங்கு இணைந்திருக்கிறது என்றால் இந்தக் கல்லூரிகளுடைய பெயரிலேயே நாட்டிற்குச் சொல்ல வேண்டிய—மாணவர்களுக்குச் சொல்ல வேண்டிய ஒரு அருமையான அறிவுரை அடங்கியிருக்கிறது. ஆண்களும் படிக்கவேண்டும் — பெண்களும் படிக்க வேண்டும்— அதுவும் செந்தமிழை முறையாகப் படிக்கவேண்டும் — படித்த பிறகு பண்பாட்டோடு நடக்க வேண்டும். ஆண்கள் கல்லூரி — பெண்கள் கல்லூரி—செந்தமிழ்க் கல்லூரி — பண்பாட்டுக் கல்லூரி என்கின்ற இந்த நான்கு தலைப்புகளும் இதைத்தான் இந்த நாட்டிற்கும் மாணவ சமுதாயத்திற்கும் எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் சொன்னார்கள் நாங்கள் படிக்கிற காலமெல்லாம் இப்படி இல்லை யென்று. காலம் மாறுகிறது. மாறிக்கொண்டுதான் இருக்கும். அதுவும் பழனியில் பெற்றோர் களிடத்திலே கோபித்துக்கொண்ட ஆண்டவன் மலை உச்சியிலே அமர்ந்திருக்கின்றார். பெற்றோர் களிடத்திலே கோபித்துக்கொண்டு தன்னைவிடத் தன் அண்ணன் திறமையாக பெற்றோர்களையே சுற்றிவந்து கனியைப் பெற்றுவிட, நாம் பெற முடியவில்லையே எனக்கு அந்தப் பழம் கிடைக்க வில்லையே என்று பழனி மலைக்கு வந்து கோவணத்தோடு நின்று— பிறகு பார்வதியும் பரமசிவனும் அங்கே வந்து பழம் நீயப்பா என்று சொன்ன பிறகு கோபம் அடங்கிய குமரக் கடவுள் வீற்றிருக்கிறார். ஆகவே, குமரர்களாகிய உங்களிடத்தில் அந்தக் குமரக்கடவுளுடைய சாயல் கொஞ்சம் இருந்திடுவதில் எந்தவிதமான வியப்பும் இல்லை.

மாணவ சமுதாயத்தை நன்றாகப் படிக்கச் சொல்லுகிறீர்கள். பண்பாடு தவறாமல் படிக்கச் சொல்லுகிறீர்கள் — கஷ்டப்பட்டுப் படிக்கச் சொல்லுகிறீர்கள்— முறையாகப் படிக்கச் சொல்லுகிறீர்கள். எல்லாம் சரி, நாங்கள் படித்த முடித்த பிறகு எங்களுக்கு வேலை வாய்ப்பு என்ன என்று கேட்கின்ற இந்த வினாக்குறி இன்றைக்கு மாணவர் சமுதாயத்தில் கம்பீரமாக எழுந்திருப்பதை நாங்கள் உணராமலில்லை.

இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு!

மாநில அரசைப் பொறுத்த வரையில் முழுப் பொறுப்பும் அந்த அரசுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் அதே சமயத்தில் அதைச் சொல்லி தட்டிக் கழித்திடவும் முடியவில்லை. அதற்காகத்தான் மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரங்களைவைத்து நம்மால் இயன்ற வரையில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கின்ற இளந்தோழர்களுக்கு அப்படிப்பட்ட இளந்தோழர்களில் இரண்டாயிரம் பேரை இளைஞர் அணியிலே இந்த ஆண்டு சேர்த்து—அவர்கள் சமுதாயப்பணி ஆற்றிடவும் ... விஞ்ஞான உலகிற்கு கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களைஇட்டுச் சென்று கிராமப் புறங்களிலே — பட்டி தொட்டிகளிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே பழகிடவும் வேண்டுமென்று இரண்டாயிரம் இளைஞர்கள் சென்ற ஆண்டு இந்த அரசின் சார்பிலே தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு கிராமங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள்-

ஆற்றுகின்ற பணிகள் சிலவற்றை நாள நேரிலேகண்டேன். முதியோர் கல்வியிலே அவர்கள் செலுத்துகின்ற நாட்டம் கொஞ்சநஞ்சமல்ல. அது மாத்திரமல்ல. பல வீடுகளில் பள்ளிக்குச் சென்று திரும்புகின்ற இளம் குழந்தைகளையெல்லாம் அழைத்துவைத்து அவர்களுக்குத் தனியாக சிறப்புப் படிப்புச் சொல்லிக் கொடுக்கின்ற காரியங்களில் இளைஞர் அணியினர் இன்றுஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் என்று அரசு எதுவும் தரவில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தருவதை ஊதியமாக அரசு கருதவில்லை. ஏனெனில் அது தகுதியான ஊதியம் இல்லை என்பதற்காக — அவர்களது செலவுக்காக—அவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக் கிட்டும் வரை இந்தப் பணியிலே தங்களை ஒப்படைத்திருப்பதற்காக அவர்களுக்கு ஆங்காங்கு பசியாற உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காக மாதம் 175 ரூபாய் இந்த அரசால் இயன்ற அளவுக்கு இரண்டாயிரம் இளம் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்கள் ஆறாயிரம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. பொறியியல் துறையிலே படித்துப் பட்டம் பெற்றவர்கட்கு இரண்டாயிரத்து ஐநூறு பொறியாளர்களுக்கு வழக்கமாக வழங்கப்படுகின்ற வேலை வாய்ப்பைத் தவிர புதிதாக அளிக்கப்பட்டது.

இப்படி ஆயிரக்கணக்கானவர்களுடைய பிரச்சினையைத்தான் நம்மால் தீர்க்க முடிகிறது. இலட்சக்கணக்கான இளைஞர்களுடைய பிரச்சினையை வேலையில்லாமல் வாடுவோருடைய பிரச்சினையை தீர்க்க வேண்டிய பொறுப்பினை ஒரு சாதாரண மாநில அரசுமாத்திரம் செய்திட முடியாது. இந்தியா அளவில் — நாட்டளவில் நடைபெற வேண்டிய காரியம் இது.

மாணவர்களும், அரசியலும்

அந்தக் காரியத்தை திட்டம் போட்டு நாம் நிறைவேற்றியாக வேண்டும். ஆகவேதான் படிக்கின்ற மாணவர்களிடத்தில் இன்றைக்கு உள்ளத்திலே ஒரு கொந்தளிப்பு ஏற்படுகிறது. அந்தக் கொந்தளிப்பு கேள்விக் கணையாக மாறுகின்றது. நாங்கள் படித்து முடித்த பிறகு என்ன செய்ய? ஒவ்வொரு அலுவலகமாகச் சென்று வேலையுண்டா, வேலையுண்டா என்று கேட்கவா? அப்படிக் கேட்கிற வேலைக்காகவா படித்தோம்? என்று கேட்கின்ற ஏராளமான இளம் மாணவர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினையை அவசர அவசரமாகத் தீர்க்க வேண்டிய பெரும் கடமையுணர்ச்சி அரசுக்கு இருக்கிறது.

அதே நேரத்தில் நான் இள மாணவர்களையும் கேட்டுக்கொள்வேன். நீங்கள் எந்தக் கல்லூரியில் படித்தாலும் உங்களைப் படிக்க வைப்பதற்காக அனுப்பியிருக்கின்ற பெற்றோர்கள் சில பேர்தான் நகரப் புறத்திலே வாழுவார்கள். பல பேர் பெரும்பான்மையான பெற்றோர்கள், கிராமப் புறத்திலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அவர்கள் உங்களைப் பள்ளிக்கு அனுப்பி வைத்து கல்லூரிக்கு அனுப்பி வைத்து நம்முடைய பிள்ளை நன்றாகப் படித்து வருவான் படித்து வந்த பிறகு நல்ல பதவிகளைப் பெறுவான். நல்ல அலுவல்கள் கிடைக்கும் — குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்கின்ற தணியாத ஆசையோடு அந்த ஏழைப் பெற்றோர்கள் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி மிஞ்சிய பணத்தைக் கொண்டு உங்களைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து மாணவமணிகளே நீங்கள் மறந்து விடாதீர்கள்.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா என்ற கேள்வி சட்டமன்றத்திலே ஒரு காலத்திலே எழுந்தது. 1958-ம் ஆண்டு நிதியமைச்சராக இருந்தவர் சி. சுப்பிரமணியம் ஆவார். அவர்தான் அப்பொழுது எல்லாக் கேள்விகளுக்கும் சட்ட சபையின் முன்னவராக இருந்து பதிலளிக்கக் கூடிய பொறுப்பினை ஏற்றிருந்தார். இந்தக் கேள்வி அவரே எழுப்பி அப்போது சட்டமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையிலே இருந்த பேரறிஞர் அண்ணா இடத்தில் அதற்கு விடை கேட்டார். அண்ணா அவர்கள் அதற்குப் பதிலளித்தார்கள்.

மாணவர்கள் அரசியலிலே ஈடுபடலாமா? இந்தக் கேள்விக்கு நான் அளிக்கின்ற ஒரே பதில் எல்லாக் கட்சிக்காரர்களும் இணைந்து நின்று மாணவர்களை அரசியலில் ஈடுபடாமல் படிப்பிலே அவர்கள் கவனம் செல்லும் வகையில் விட்டு விட்டால் மாணவர்கள் நம்மிடமிருந்து தப்புவார்கள். ஆகவே அனைவரும் சேர்ந்து இந்த முடிவினைச்செய்வோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது என்ன காரணத்தினாலோ தொடர்ந்து எல்லாக் கட்சியும் சேர்ந்து முயற்சி எடுக்காததால் ஏற்படவில்லை.

மாணவர்களுக்கு அரசியல் தேவை. இதை உத்தமர் காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மாணவர்கள் அரசியலைக் கற்றுக் கொள்ள வேண்டும், இன்றைக்கும் வெளி நாடுகளில்-ரஷ்யா-அமெரிக்கா போன்ற நாடுகளில்-பிரிட்டன்-பிரான்சு போன்ற நாடுகளில் மாணவர்கள் அரசியலைத் தனியாகவே படிக்கிறார்கள். வெளிநாட்டிலே நான் சிகாகோ பல்கலைக் கழகத்திலே பேச அழைக்கப்பட்டபோது அங்கே பல மாணவர்களைச் சந்தித்தேன். அந்த நாட்டு மாணவர்களை!

அவர்கள் அரசியல் படிக்கிறார்கள். அரசியல் என்றால் தமிழ் நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சி-பஞ்சாபிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் இப்படித் தனித் தனியாக அரசியல் கட்சிகளைப் பற்றி ஒவ்வொரு மாணவனும் ஆராய்கிறான். எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியைப் பற்றி அந்த நாட்டு மாணவனிடத்திலே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு அவர்கள் அரசியலைத் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் அரசியலிலே முழுமையாக ஈடுபடுகிறார்களா என்றால் இல்லை. ஆனால் அரசியலிலே ஈடுபடவேண்டிய கட்டம் என்னவென்றால் அது நாடு மீட்கப்பட வேண்டும் என்ற நிலை வரும்போது மாணவர்கள் அரசியலில் நேரிடையாக ஈடுபடலாம். அதைப் போல தன் மொழி அழிக்கப்படுகிறது என்ற நிலை வந்தால் எப்படி சுதந்திரம் ஒரு கண்ணோ அதைப் போல மொழியைக் காப்பாற்றுவது மற்றொரு கண்ணாகும். அப்படி மொழிக்காகப் போராடுவது நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடுவதும் மாணவர்களின் இரண்டு கண்களாக இருக்க வேண்டும்.

வேறு எந்தப் பிரச்சினையானாலும் அவைகளைப் பேசித் தீர்த்துக்

கொள்ள வேண்டும். ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு பிரச்சினை உண்டு. ஒரு கல்லூரிக்கு பேருந்து வண்டி இல்லாமல் இருக்கலாம். அது பிரச்சினையாகலாம். ஒரு கல்லூரியில் தேவையான நேரத்தில் குடிதண்ணீர் கிடைக்காமல் இருக்கலாம். அது பிரச்சினையாகலாம். ஒரு உணவு விடுதியில் ஒருநாள் சோறு சரியாக வேகாமல் இருக்கலாம். அது பிரச்சினையாக இருக்கலாம். இப்படி எத்தனையோ பிரச்சினைகள் வருகிற நேரத்தில் அவைகளை யெல்லாம் பேசித் தீர்த்துக் கொள்வது நல்லது.

நான் மாணவர்களைப் பொறுத்த வரையில் மிகப் பணிவன்பாக என்னுடைய சகோதரர்களாக எண்ணி-உடன் பிறப்புக்களாக எண்ணி ஒரு வேண்டுகோளை விடுக்க நினைக்கின்றேன். தொழிலாளர்கள் பத்து நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் வேலை நிறுத்தம் முடிந்து அதற்குப் பிறகு சமரசம் ஏற்பட்ட பின்பு சில சமரசங்களில் வேலை நிறுத்தத்திற்கான சம்பளத்தைக் கூடக் கொடுத்து விடுகிறார்கள்.

சில இடங்களில் இழந்தால் சம்பளத்தைத்தான் இழக்கிறார்கள். ஆனால் மாணவ நண்பர்களே நீங்கள் பத்து நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் நீங்கள் இழப்பது பத்து நாள் கற்றுக் கொள்ள வேண்டிய கருத்துக்களை இழக்கிறீர்கள். அதை மறந்துவிடக் கூடாது.

வேலை நிறுத்தத்திலே தொழிலாளர்கள் ஈடுபட்டால் நட்டம் முதலாளிக்கு! - வேலை நிறுத்தத்திலே மாணவர்கள் ஈடுபட்டால் நட்டம் மாணவர்களுக்குத்தான். இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டோமானால் எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நிச்சயம் ஏற்படாது.

எதிர்காலத் தலைவர்களாக விளங்குவீர் !

அதற்காக மாணவக்கள் உள்ளம் சோம்பல் உள்ளமாக இருக்க வேண்டும். அது கிளர்ந்தெழக் கூடியஉள்ளமாகஇருக்கக்கூடாது. அது கோழைத்தனமாக ஆமை போல் அடங்கி ஒடுங்கிக் கிடக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். நீங்கள் அரிமாபோல் இருக்க வேண்டும்-நிமிர்ந்து நிற்கும் வேங்கையைப்போல் வாழ வேண்டும். ஆனால் பள்ளிப் படிப்பில் கல்லூரிப் படிப்பில் கவனஞ் செலுத்துகின்ற நேரத்தில் நீங்கள் நாட்டின் எதிர்காலத் தலைவனாக வரவேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தோடு புத்தகத்திலே நாட்டம் செலுத்திட வேண்டும்.

இங்கே இருக்கின்ற மாணவர்கள் நாளை-நாளை மறுநாள் அல்லது ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு பத்தாண்டு காலத்திற்குப் பிறகு எங்களைப்போல் ஒரு கல்லூரிக்கு அழைக்கப்பட்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று கேட்கப்பட வேண்டியவர்கள்; நாளை பேசுகிற நேரத்தில் மாணவர்கள் கூட்டம் அமைதியாக இருக்கவேண்டுமே என்ற எண்ணம் அப்போது எழும். அப்போது நாம் செய்ததைத்தானே இப்போது மாணவர்கள் இங்கு செய்கிறார்கள் என்ற எண்ணம் அப்போது உங்களுக்கு எழக் கூடாது.

ஆகவே நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக — எதிர் காலத்தில் பொறுப்புக்கு உரியவர்களாக இருக்கின்ற மாணவ மணிகள் நல்ல பண்பாட்டு உணர்ச்சியோடு -மொழி உணர்ச்சியோடு தங்கள் வாழ்க்கையைஅமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு ஏற்றவாறு சுற்றுச் சார்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்-அதற்கேற்றவாறு தங்கள் கல்வியை அமைத்துக்கொள்ள வேண்டும்.

—பர.நி மாணவர்களிடையே
14—2—72இல்

★

விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்களின் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
"காஞ்சி", காஞ்சிபுரம்-3.



எழுத்தாளர்கள் நிலைபற்றி அறிஞர் அண்ணா

★

ஓர் எழுத்தாளன் எழுதியதை மற்றொரு எழுத்தாளன் குறை கூறலாம். நான் எழுதுகின்ற எழுத்தில் - அன்பு கணபதி தவறு காணலாம். அவர் எழுத்துலகில் அதிக ஈடுபாடு கொண்டவர். அதிக அக்கறை கொண்டிருப்பவர்; அவருக்கு என்மீது எந்த விரோதமும் கிடையாது. அவர் குற்றம் காண்பாரானால் அதை ஒப்ப முடியும். ஆனால் நான் எழுதியதை, அச்சுக் கோப்பவர் ஒருவர், இன்னின்ன பகுதிகள் அருவருக்கத் தக்கவை; அவற்றை அச்சுக் கோக்க மாட்டேன்? என்று கூறினால், அதற்குப் பொருள் என்ன? இவர் அச்சுக் கோப்பவர் - அவர் மாவட்ட கலெக்டர் - இதுதான் வித்தியாசம். எழுத்தாளர்கள் தங்களை இப்படிப்பட்ட நிலைக்குமா உட்படுத்திக் கொள்ள வேண்டும்? வறுமைக்குத்தான் அவர்கள் தங்களை உட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், தங்களுடைய உரிமையுமா விட்டுக் கொடுக்க வேண்டும்?

எதையும் எதிர்ப்போரே! இதுவா அரசியல்!!

"குமுதம்"—17-2-'72ஆம் நாளைய இதழில் **"மானெக்ஷாவைக் கேளுங்கள்"**—என்ற தலைப்பில் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

எடுப்பும் தொகுப்பும் **இராணுவ வலிவு குறித்து**; ஆனால் முடிப்போ **மாநில சுயாட்சிக்கு** வருகிறது.

வேறுபாடு புரியாமலா இருக்கிறது அந்த இதழாசிரியருக்கு. புரியத்தான் செய்கிறது. என்றாலும் தன்னை இனங் காட்டிக்கொள்ள வேண்டாமா?

அவரது கூற்று சரியா?

"கொஞ்சம்" ஆராய்கிறார் **"பொடியன்"**.

எதையும் தின்பது, எப்படியும் வாழ்வது என்பது மிருகத்தின் பண்பு என்பர். அந்த மிருகங்களில்கூட சிலவகை, இதைத்தான் தின்பது, இப்படித்தான் வாழ்வது என்ற எல்லைக்குள் இருப்பதாகவும் சிலர் கூறுவர். விலங்குகளிலும் பறவைகளிலும் மாமிசம் உண்ணுதனவற்றை எண்ணிப் பார்க்கும்போது இந்த உண்மையை எவரும் ஏற்றுக்கொள்வர்.

என்ன செய்வது?

விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உள்ள இந்த பண்புகள்கூட இன்றைய அரசியல் வாதிகள் சிலரிடம் இல்லை என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் காணவேண்டும்" என்ற—வள்ளுவர், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று ஏன் சொன்னார் என்பது இன்றைய வயிற்றெரிச்சலே அரசியல் வாழ்வெனக் கொள்வோரை எண்ணிப் பார்க்கும்போதுதான் தெளிவாகிறது.

சொல்லப்படுகிற கருத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கும் அறிவும், திறமும் இன்றைய அரசியலில் செத்தொழிந்து விட்டதோ என்று சிந்திக்கும் அளவிற்குத் தமிழக அரசியல் சிலரின் செப்படி வித்தைகளால் கொண்டு செல்லப்படுகிறது.

பாதுகாப்பிற்கும் பங்கம் ஏற்படுத்தும் கருத்தேயானாலும், மாம்பலத்து மாமுனி சொன்னால், 'அதிலும் ஏதாவது இருக்கும்; அறிஞர் சும்மாவா சொல்வார்!!' என்று சொக்காட்டான் ஆடும் அரசியல் வாதிகள், தூய்மையான உள்ளத்துடன் சில 'சாமானியர்கள்' சொல்லும் கருத்துக்களைச் சூதென்றும்,சூழ்ச்சியென்றும் என்றும் சொல்லித் தங்கள் 'சூரசம்கார' வேலையைத் தொடங்கி விடுகிறார்கள்.

'சாய்வு நாற்காலி'களுக்குத் தரப்படும் சீரையும் சிறப்பையும், 'ஓய்வறியா உழைப்புகளுக்கு' ஏன் தரப்படுவதில்லை என்பதை, இன்றில்லாவிட்டாலும் நாளை, அந்த நாடு எண்ணித்தான் பார்க்கும்!!

'அதிக அதிகாரங்கள் மாநில அரசுகளுக்குத் தேவை' என்பது வளர்ந்துவிட்ட உரிமைக்குழந்தை. அதைக் கருவிலேயே அழிக்க முடியாதவர்கள் நடை பயிலத் தொடங்கியிருக்கும் இந்தக் காலத்திலும் 'விட்டேனா பார்' என்று வீரம் பேசுகிறார்கள்.

வீரம் பேசுவதைப் பற்றியோ, வேலெடுத்துச் சுழற்றுவதைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. காரணம், அது வெறும் அரசியல்—விளையாட்டுக்கள் என்பதை நம்மைவிட நாடு நன்கு அறிந்துள்ளது.

"எதற்கென்றாலும் என்னைக் கேள்; உன் வீட்டுச் சோறாக இருந்தாலும், என்னைக் கேட்டு உருட்டு, என் ஆணை பெற்று வாயிலிடு; என் ஒப்புதல் பெற்று உள்ளே போகவிடு" என்பது போல் மத்திய அரசு சொல்வதை மாநில அரசுகள் ஏற்பதுதான் ஒற்றுமையின் சின்னம் என்னும் உளுத்துப்போன வாதங்களை வாள்களாக மாற்றி எத்தனை முறை வீசினாலும், நடக்கப்போவது ஒன்றுமில்லை.

"மத்திய அரசு நினைப்பதைத்தான் மாநிலங்கள் நினைக்கவேண்டும்; மத்திய அரசு சொல்வதைத்தான் மாநிலங்கள் செய்யவேண்டும்; மத்திய அரசின் கொள்கைகள் மாநில அரசின் தலைவிதிகள்" என்றால் அதற்கு மாநில அரசு என்ற பெயரால் ஒன்று தேவைதானா? எல்லாமே தலைமை அமைச்சர்தான் என்றால், முதல் அமைச்சர்கள் ஏன்? எல்லாமே நாடாளு மன்றந்தான் என்றால் சட்ட மன்றங்கள் ஏன்?

கேரள மாநிலத்திலும் இக்குரல் கேட்கிறது.

வங்கத்தின் தேர்தல் உறுதிகளில் இதுவும் ஒன்றாகிவிட்டது.

இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் கீற்று நிலவாக இருந்த இந்தக்குரல், இன்று வளர் பிறையாகி, முழுமதியாகி, அதன் இனிய ஒளி எங்கும் பரவிவிட்டது என்கிறபோது, விண்மிரட்டல்களும், விதண்டா வாதங்களும், பிரச்சனையைச் சிக்கலாக்கி விடுமேதவிர இல்லாமல் ஆக்கிவிட முடியாது.

காயக் காய மணங்கொடுக்கும் தாழம்பூவிற்கும், உண்மையான உரிமைக்குரலுக்கும் வேற்றுமை இல்லை என்பதை சிலர் விளங்கிக் கொள்வதுதான் ஆக்கத்திற்கு வழிகாட்டும்!!

இந்த உண்மையை மறந்துவிட்டு, பிரிவினை...பிரிவினை என்பதும், பிளப்பதா...பிளப்பதா என்பதும் பூச்சாண்டிகாட்டுவதாகுமே தவிர, பொறுப்புள்ளவர்களின் பேச்சாகாது.

முதலில் நாட்டின் ஒற்றுமை; இரண்டாவதே மாநிலத்தன்னாட்சி என்று மனந்திறந்து, மக்களைக்கூட்டி சொல்லிவிட்ட பிறகு நம்பமாட்டோம் நம்பமாட்டோம் என்பது, ஏமாற்றியே பழக்கப்பட்டவர்களின் இயல்பாகுமே தவிர, எழுச்சியை, அடக்கிடப் பயன்படாது.

'பிரிவினைக் கேட்கவில்லை' என்றும், 'இந்தியாவின் ஒற்றுமையே குறிக்கோள்' என்றும் சொல்லிவிட்ட பிறகு, பிரிவினைதான் கேட்கிறாய், பிரிவினைதான் கேட்கிறாய் என்பது, பிரிவினை கேள்! பிரிவினை கேள்! என்று தூண்டிவிடும் துடுக்குத்தனமாகுமே தவிர, ஒற்றுமை வளர்க்கும் உணர்வாகாது.

"மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்கள் போதாது; அதிகஅதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்" என்று சொல்பவர்கள்கூட மாநிலத் தன்னாட்சி கூடாது என்பதுதான் வேடிக்கை.

'அதிக அதிகாரங்கள் தேவை' என்பதற்கான விளக்கங்களுக்கு இட்ட பெயர்தான் மாநிலத் தன்

னாட்சி என்பது. இதைப் புரிந்து கொண்டே, சிலர் அதிக அதிகாரம் என்றால் கேள்; ஆனால் மாநிலத் தன்னாட்சி என்று சொல்லாதே என்கிறார்கள்.

இங்கேதான் நாம் ஒரு உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். அதிக அதிகாரங்கள் தேவை என்று மத்திய அரசைக் கேட்பதைப் பற்றியோ, அதற்குப் பெயரை மாநிலத் தன்னாட்சி என்று சூட்டியதைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை கிடையாது.

இப்படி ஒரு குரலைக் கொடுத்தது அண்ணாதுரைதானே; இப்போது குரல் கொடுப்பது கருணாநிதிதானே!! இவர்கள் என்ன பெரிய மனிதர்களா? பெரிய குடும்பத்துப் பிள்ளைகளா? இல்லை, பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்களா? என்னும் மேட்டுக் குடிப் புத்தியே தவிர வேறல்ல.

அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர் என்பது உண்மையானால், கேரளத்து மண்ணிலிருந்து இதே குரல் ஒலித்த போதும். வங்கத்திலிருந்து தேர்தல் அறிக்கையாக வெளிவந்த போதும், கண்டனக் கணைகளை அவர்களை நோக்கி வீசி இருக்க வேண்டும்.

தலையங்கக் காகிதப் புலிகள் அவர்களை நோக்கிப் பாய்ந்திருக்கவேண்டும்.

செய்தார்களா என்றால், இல்லை!!

அப்போதும் அவர்களின் தொலை நோக்கிக் கண்களுக்கு அண்ணா தெரிகிறாரே தவிர, கலைஞர் தெரிகிறாரே தவிர, வேறெவரும் படவில்லை.

இந் நேரத்தில் இன்னொன்றையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்தி வேண்டாம் என்றால், வேண்டும் என்கிறார்கள். அதற்கும் அவர்கள் காட்டிய காரணம் இந்திய ஒற்றுமைதான்.

'தமிழ்நாடு' என்னும் பெயர் வேண்டும் என்றோம்; அப்போதும் அவர்கள் வேண்டாம் என்றார்கள். அதற்கும் அவர்கள் காட்டிய காரணம் இந்தியாவில் 'நாடு' என்பது ஒற்றுமையைக் கெடுக்கும் என்பது தான்.

பயிற்றுமொழி தமிழ் என்றோம்; ஆகுமா அந்தி என்றார்கள்; அப்போதும் அவர்கள் இந்தியாவின் ஒற்றுமையையே காரணங் காட்டினார்கள்.

ஆலயங்களில் அருந் தமிழில் அர்ச்சனை என்றோம்; ஆண்டவன் பொறுக்கமாட்டான் என்றுதான் அவர்கள் குதித்தெழுந்தார்கள். அதற்கும் அவர்கள் காட்டிய காரணம் இந்திய ஒருமைதான்.

இப்படி நாம் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், அதற்கு அவர்கள் காட்டிய மறுப்பு இந்திய ஒற்றுமை என்பதொன்று தான்.

கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்கும் குணம் அவர்களின் கருத்தைக் குருடாக்கிய காரணத்தினால், இந்திய ஒற்றுமை என்னும் கோலைத் தவிர, அவர்களால் எதையும் தொட முடியவில்லை.

அவர்களை ஒரு வேடிக்கை மருத்துவர்க்ள் எனலாம். வயிற்று வலியா? பிடி இதை; வயிற்றுப் போக்கா? பிடி இதை; காய்ச்சலா? தலைவலியா? காலில் அடியா? கழுத்தில் கட்டியா? இதையே பிடி; இதையே குடி; இதையே பூசு என்று எதையோ உருட்டிக் கொடுக்கும் அரை வைத்தியனுக்கும், இவர்களும் அநேகமாக வேற்றுமை இருக்கமுடியாது.

வங்க நாட்டின் விடுதலைக்கே ஆதரவு காட்டிய வெற்றிச் செல்வியார் இந்திரா காந்தி அவர்கள், வங்க நாட்டின் விடுதலைக்கு உலகெங்கும் காரண காரியங்களை விளக்கி ஆதரவு தேடிய வீர மகள் இந்திராகாந்தி. அவர்கள் மாநிலங்களின் உரிமைக் குரலுக்கா மதிப்பளிக்கமாட்டார்கள்? விடுதலைக்கே துணை நின்றவர்கள் அதிக அதிகாரங்கள் தேவையென்னும் மிகமிகச் சாதாரணமான குரலில் ஒலிக்கும் நியாயத்தை மறுப்பார்களா? என்று நாம் கேட்டால், உங்களுக்கு என்ன முஜிபுர் ரகுமான் என்ற நினைப்பா என்கிறார்கள், அத்தோடு இங்கு யாரும் யாகியாகான் இல்லையே என்கிறார்கள்.

பணிவுடன் ஒன்றைமட்டும் இந் நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறோம்.

யாகியாகான் இருந்தால்தான் முஜிபுர் ரகுமான்கள் தோன்றவேண்டும் என்பதில்லை. ஜனநாயகத்தில் கூட, ஒரு இனத்தின் உணர்வு மிதிபடும் போது, அந்த இனம் கிளர்ந்தெழுவதும் உண்டு; அந்த இனங்களில் முஜிபுர் ரகிமான்கள் தோன்றிடுவதும் உண்டு.

அந்த வகையில், மாநிலங்களுக்கு உரிமை வேண்டும் என்று ஜனநாயகத்தை உணர்ந்த இந்திரா காந்தி அவர்களிடம், ஜனநாயக முறையோடு மாநில உரிமை கேட்கும் கலைஞரை அன்போடு முஜிபுர் ரகுமான் அவர்களோடு இணைத்துப் பேசுவது தவறாக முடியாது.

எனவே, கலைஞர் அவர்களை முஜிபுர்ரகுமான் என்பதாலேயே அடுத்தவர்களை யாகியாகான் என்பதாக நினைப்பது உவமையின் இலக்கணத்தை அறியாத் தனமாகும்.

'பவளம் போன்ற செவ்வாய்' என்றவுடன், செவ்வாயைச் சிதைத்து மாலையாக்க முனையலாமா என்பவன், உவமை, செம்மை நிறத்திற்கு மட்டுமே என்பதை அறியாதவனாகவே இருக்க முடியும்.

கொஞ்ச நாட்களுக்கு முன், இந்திரா காந்தி அவர்களால் எடுத்தெரியப் பட்டபோது, 'இந்திரா காந்தி சர்வாதிகாரியாகிறார்' என்று உளறிக்கொட்டிய மேதைகள், தங்களைப் போல் மற்றவர்களை நினைப்பதை இதைப் பொறுத்தவரை விட்டுவிட வேண்டும்.

அன்றைக்கு அண்ணா அவர்கள் சொல்லியதையும், இன்று கலைஞரும், கழகமும் கூறுவதையும் மறுத்தே பழக்கப்பட்ட மேதைகள் இனியாவது காரண காரியங்களை ஒழுங்காகச் சொல்லப் பழகட்டும்.

இல்லையென்றால் நன்மை நமக்குத்தான்.

இந்த மேதைகள் எதையெதை மறுத்தார்களோ, அவையெல்லாமே இன்று நிறைவேறி வருகின்றன. இன்று மாநிலத் தன்னாட்சியை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையென்பதை அவர்கள் எதிர்ப்பது, நாளைக்கு அதன் வெற்றியை வெள்ளிடை மலையாக்குகிறது.

★

எங்கே போகிறது இந்திரா காங்கிரஸ்?

அண்மையில் நடைபெறப் போகும் 14 மாநிலங்களுக்கான சட்ட மன்றத் தேர்தல்களில், மத்திய பிரதேசத்தில் மட்டும் 13 மாஜி மன்னர்கள் போட்டியிடுகிறார்களாம்!

ஐயோ! மத்தியப் பிரதேசமே!

வழக்கு மன்றத்தில் விலங்குகள்

ஜூரிகள் அனைவரும் வந்துவிட்டனர்—மாஜிஸ்ட்ரேட்டும் மிடுக்கோடு வந்து அமர்ந்தார், தனது ஆசனத்தில்! அந்த வழக்கைக் காண வந்திருந்த மக்கள்தொகை, ஏராளம்! எனினும், அமைதி நிலவியது அந்த மன்றத்தில்! "குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டு வரப்படலாம்" என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதும், இரும்பால் ஆன ஒரு பெரிய கூண்டு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது! அதற்குள்ளிருந்ததோ, ஒரு ஓநாய்!

ஆம்! அன்று விசாரணைக்கு உள்ளானது, அந்த நாய்தான்!

முதலில் அதன்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது, சர்க்கார் தரப்பு வழக்கறிஞரால்!

பின்னர் வேறொரு வழக்கறிஞர் வாதாடினர், ஓநாயின் சார்பில்!

கடைசியில், மாஜிஸ்ட்ரேட், இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின், தீர்ப்பளித்தார், ஓநாய் குற்றவாளிதானென்றும், அது பொது இடத்திலே தூக்கிலிடப்பட வேண்டுமென்றும்!

ஃ ஃ ஃ

விசித்திரமான இந்த வழக்கு, நடைபெற்றது ஐரோப்பாவில்—1442ம் ஆண்டு!

இதுபோன்ற வழக்குகள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன, அந்தக் காலத்தில்!

1386ல் ஒரு பன்றி விசாரணைக்கு உள்ளாயிற்று —அதன்மீது சாட்டப்பட்ட குற்றம் அது ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டதென்பது! மாஸ்ஜிட்ரேட் மிகவும் வேதனையுடன் தீர்ப்பளித்தாராம், அதனுடைய தலை, ஒரு பொது இடத்திலே வெட்டப்பட வேண்டுமென்று!

விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டபோது, மனிதனைப்போல் உடை உடுத்தியிருந்தார்களாம்!

இதே குற்றத்திற்காக, ஒரு பெண் பன்றியும், அதன் ஆறு குட்டிகளும் வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டன—செவிக்னி (Sevigny) என்ற நகரில்—1547ம் ஆண்டில்!

பன்றிகளின் சார்பிலே வாதாடிய வழக்கறிஞர் தனது வாதத்திறமை முழுவதையும் வெளிப்படுத்தினர்—முடிவு, தாய்ப்பன்றிக்கு மட்டுமே தண்டனை —குட்டிகள் காப்பாற்றப்பட்டன!

எனினும் அடுத்த மூன்று வாரங்களில், அந்த ஆறு பன்றிக்குட்டிகளும், மீண்டும் வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டன. காரணம், அவை எதிர்காலத்தில் நன்னடத்தையுடன் இருக்கும் என்று உறுதியளிக்க, அவற்றின் உரிமையாளர் மறுத்துவிட்டாராம்! தாயின் குணம் குட்டிகளுக்கு இல்லாமலா போகும், என்று அவர் கருதியதாலேயே, உறுதிமொழி தர மறுத்தாராம்.

பர்கண்டி (Burgendy) என்னுமிடத்தில் 1347ல் ஒரு வழக்கு— மூன்று பன்றிகள் அவற்றின் குட்டிகள் கூண்டேற்றப்பட்டன, ஒரு குழந்தையைக் கொன்றதற்காக!

அந்தப் பன்றிகளின் உரிமையாளர், பன்றிகளுக்காக வாதாடவில்லை—அந்தக் குட்டிகளுக்காக வாதாடினர்; வயதைக் காரணமாகக் காட்டி.

"குழந்தை கொல்லப்படுவதைப் பன்றிக் குட்டிகள் பார்த்துக்கொண்டு வாளா இருந்தன—அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முன்வரவில்லை—என்றாலும் அவற்றின் வயதை உத்தேசித்து அவற்றை விடுதலை செய்கிறேன்"— என்று தீர்ப்பளித்தார் மாஜிஸ்ட்ரேட்!

ஃ ஃ ஃ

1314ல் ஒரு மனிதனைக் கொம்பால் தாக்கிக் கொன்றதற்காக, காளை ஒன்று, சிறையிலிடப்பட்டது! சிறையில் மனிதர்களோடு அதுவும் அடைபட்டிருந்தது! விசாரணை முடிந்ததும் அது தூக்கிலிடப்பட்டது!

ஃ ஃ ஃ

மனிதனைக் கொன்றதற்காக ஆண் குதிரையொன்று தூக்கிலிடப்பட்டது—பெண் குதிரை, பொது இடத்தில் எரிக்கப்பட்டது, கிரேக்கநாட்டில்!

ஃ ஃ ஃ

பிரெஞ்சு நாட்டில் மற்றொரு வழக்கு நடைபெற்றது, 1521-ம் ஆண்டு! அதில் எலிகள் விசாரணைக்குள்ளாக்கப்பட்டன.

பார்லி தானியக் கதிர்களை அழித்ததாகவும், களவாடியதாகவும், அவற்றின் மீது வழக்குத் தொடர்ந்திருந்தார் ஒரு விவசாயி!

சம்மன்கள் அனுப்பப்பட்டன, அந்த எலிகளுக்கு. ஆயினும் அவை, தங்கள் வளைகளைவிட்டு வெளியே வருவதாக இல்லை!

அவற்றின் சார்பிலே ஒரு பிரபல வழக்கறிஞர்— பார்தலோமியூ செஸ்னி என்பார்—வாதாடினர்!

ஒரு பகுதியிலேயுள்ள எலிகளுக்கு மட்டுமே சம்மன்' அனுப்புவதில் பொருளில்லை—ஊரிலுள்ள எல்லா எலிகளுக்கும் அனுப்ப வேண்டும்—என்று அவர் செய்த வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது! ஊரில் காணப்பட்ட எலி வளைகள் அத்தனையிலும் 'சம்மன்'கள் காணப்பட்டன.

ஆயினும் எலிகள் நீதிமன்றத்தின் ஆணைக்குக் கட்டுப்படுவதாக இல்லை!

எனவே, அந்த வழக்கறிஞர் வேறொருவகையான வாதத்தில் இறங்கினர்.

"எலிகள், தங்களது வளைகளிலேயிருந்து வெளியேவர அஞ்சுகின்றன. காரணம், வாதி ஒரு பூனையை வளர்க்கிறார். எனவே, அவரது பூனையால் எலிகளுக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படாது என்பதற்குப் பெருத்த ஜாமீன் தொகையை வாதி, வழக்குமன்றத்தில் செலுத்தினால், எலிகள் ஆஜராகத் தயாராக இருக்கின்றன"—இது அவரது வாதம்!

வாதத்தில் நியாயம் இருக்கிறதென ஏற்றுக் கொள்ளப்பட்டது—ஜாமீன் செலுத்த, வாதி தயா

ராக இல்லாததால், வழக்குத் தள்ளுபடி செய்யப் பட்டது!

ஃ ஃ ஃ

ஒரு கரடி வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டது, 1499ல்! அதன் சார்பிலே வாதாடிய வழக் கறிஞர் கூறினர், "கரடியை விசாரிக்க, நமக்கு உரிமையில்லே. கரடி வர்க்கத்திலேயுள்ள 'பெரிய தனக்காரர்கள்' தான் ஜூரிகளாக இருக்கவேண்டும்" என்று!

இந்த வாதம், பெரியதொரு குழப்பத்தை ஏற் படுத்திவிட்டது—வழக்கும் நீண்டது, சில வாரங் கட்கு!

ஃ ஃ ஃ

கொலே கொள்ளே முதலிய வழக்குகள், நாய் பூனே போன்ற பிராணிகள் சாட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன!

அவற்றின் சொந்தக்காரர், அவற்றின் முன்னிலே யில், குற்றத்தை மறுக்கின்ற நேரத்தில், அவை அமைதியாக இருப்பின், அவர் நிரபராதி என ஏற்றுக் கொள்ளப்பட்டார்!

குற்றவாளியெனில் கடவுள் பேசாமலிருக்கமாட் டார்—அவற்றின் செய்கைகள் மூலம், குற்றவாளி யைக் காட்டிக் கொடுத்துவிடுவார்—என்ற நம்பிக்கை அவர்களுக்கு!

ஃ ஃ ஃ

உயர்ந்தரகப் பொழுதுபோக்குகள் இல்லாத காலம் அது—இதுபோன்ற வழக்குகள், நாகரிகமற்ற உள்ளங்களுக்கு நல்ல பொழுது போக்குகளாக அமைந்தன-என்பதைத்தவிர வேறெந்தவிளக்கம்தர முடியும், இத்தகைய விநோத வழக்குகளேப்பற்றி? *

(15-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பிழைத்துக் கொள்வான்...நிச் சயம் பிழைத்துக் கொள்வான்... பிழைப்பான் என்ற நம்பிக்கையில் தானே இத்தனே சிரமப்படுகி றேன்..." என்று சொல்லி மன சைத் தேற்றிக் கொண்டு, பையனே எழுப்பி காபி குடிக்கச் செய்கிருள்.

அதற்குள்—

குடிசைக்குப் பின்னுல் நின்று கொண்டு, "கோமக்கா கோமக்கா ..." என்று கரடியாய்க் கத்து கிருன் பொடியன். நச்சரிப்புத் தாங்காமல் கோமு எழுந்து கொல் லேக்குப் போகிருள்.

"ஏண்டா இப்படிக் கத்தறே?"

ஆமா......இந்தக் கொடிக்குப் போய் தண்ணி ஊத்தி வச்சிருக் கியே, ஏன்?"—பொடியன் அவ ரைக் கொடியைச் சுட்டிக் காட்டிக் கேட்கிருன்.

"ஏன் இப்படிக் கேட்கிருய்?"—கோமுவின் குரல் தழுதழுக்கிறது.

"அதான் இலேயெல்லாம் கருகிப் போச்சே. பின்னே எதுக்கு தண்ணி ஊத்தறே?" என்கிருன் பொடியன்.

"கருகிப் போனுலும் பிழைச் சுக்கும்" — கோமுவின் குரலில் அப்படியொரு உறுதி.

"பிழைக்கும்னு சொல்றே? எனக் கென்னவோ......" — பொடியன் குரலே நீட்டுகிருன்.

"டேய்!" என்று, ஆவேசத்துடன் அவனது வாயைப் பொத்துகிருள் கோமு.

'பொடியனு'க்கு அவளது மன நிலே புரியுமோ?

"ஊஹூம். அதெல்லாம் பிழைக் காது; பிழைக்காது; பிழைக்கவே பிழைக்காது!" என்கிருன் அவளி னும் உறுதியாக.

அவன் சொன்னதுதான் தாமதம்-

"என்ன சொன்னே?...பிழைக்கா துன்னு சொன்னே? பிழைக்கா துன்னு சொன்னே..." என்று வெறி பிடித்தவளாய்க் கத்திக் கொண்டு, கோமு பொடியனேப் பொழிந்து தள்ளிவிட்டாள்.

பொடியனுக்கு மூச்சு இரைத் தது. முதுகும் கன்னமும் அப்பமாய் வீங்கி விட்டன...

சற்று நேரத்துக்கு யாரும் எது வும் பேசவில்லே. நீண்ட நேர அமைதிக்கு முற்றுப் புள்ளியாக பொடியன் வாய் திறந்தான்; "ஏன் கோமக்கா என்னே இப்படி அடிச்சே?"

"அது...அது..." கோமுவும் தேம்பினுள். *

★

நம்பிக்கை

— சந்திரோதயன் —

சிறுகதை!

வரிசை வரிசையாக குடிசைகள் அமைந்துள்ள அந்தப் பகுதியில், கோமு கொஞ்சம் கலகலப்பான சுபாவம் உடையவள். நண்டும் சிண்டுமாக ஐந்து பிள்ளைகள் என்றாலும், அவளது முகத்தில் மகிழ்ச்சிக்குப் பஞ்ச மிருக்காது. அவளது கணவனுக்கு தின வரும்படி இரண்டு ரூபாய்; இன்ன வேலை என்று கிடையாது.

அவளது குடிசைக்குப் பின்புறமாயுள்ள ஐந்து அவரைக் கொடிகளுக்கும், எப்படி அந்த ஒரே ஒரு வேலங் குச்சியை விட்டால் வேறு ஆதாரமில்லையோ, அப்படியே அந்த ஐந்து ஜீவன்களுக்கும் அந்த இரண்டுருபாயை தவிர வேறெந்த உத்திரவாதமுமில்லை.

வாரம் இரண்டாகிறது. கோமுவின் மூத்த பையன் நாளுக்குநாள் சுகவீனமாகிக்கொண்டு தான் வருகிறானே தவிர, கொடுத்த சிகிச்சைக்கும் கொட்டிச் செலவழித்த துட்டுக்கும் கொஞ்சமாவது உடல் தேறக் காணோம்.

வேறொன்றுமில்லை—

அன்றொரு நாள் ஆட்டுக்கு இலை பறிக்க மரத்தில் ஏறியவன்தான். கிளை முறிந்து; கீழே விழுந்து……

—உடம்பெல்லாம் ஊமைக் காயங்கள். போதாக் குறைக்கு ஜுரம் வேறு.

வேலாயுதம்தான் பார்க்கிறார்.

பலன்?

இந்த இரண்டு வாரத்துக்கிடையில், கோமு தன் பிள்ளைக்காக சற்று 'தாராளமாகவே' செலவழித்துப் பார்த்துவிட்டாள். 'எப்படியாவது பையன் பிழைத்தால் போதும்!' என்ற நினைப்பில் என்ன நெருக்கடி வந்தாலும் 'இதை' மட்டும் கழற்றுவதில்லை என்று உறுதி கொண்டிருந்த ஒற்றை மூக்குத்தியும்கூட, நேற்று அடகுக் கடைக்கு பயணமாகி விட்டது.

எதிர்த்த குடிசை மாதா சொன்னாள்: ஏன் இப்படியெல்லாம் காசைப் போட்டு கரி ஆக்குறே… அதான் வைத்தியர் சொல்லிட்டாரே, 'பையன் பிழைக்கிறது சந்தேகம்தான்' என்று. பின்னே ஏன் காசைக் கரியாக்கணும்…'' என்று.

அப்போது கோமுவுக்கு வந்த ஆத்திரம் …… அடக்கிக்கொண்டு வீடு வந்து விட்டாள்.

விடியற்காலை.

—'பையன்' படுக்கையைத் தஞ்சமடைந்த பதினைந்தாம் நாள். பாயைச் சுருட்டிப் போட்டுவிட்டு, கோமு குடிசைக்குப் பின்புறம் வருகிறாள்— அவரைக் கொடிகள் ஐந்தும் சற்று வாடிப் போய் நிற்கின்றன. பையனுக்கு உடம்புக்கு வந்த பிரளயத்தில் தண்ணீர் ஊற்ற மறந்ததன் எதிரொலி.

கோமு பானைத் தண்ணீரை எடுத்து ஊற்றுகிறாள்…

என்ன கொடுமை! அந்த ஐந்து அவரைக் கொடியிலும் சற்று நீளமாக வளர்ந்திருந்த கொடி, இலைகள் கருகிப்போய், மெத்தவும் சோம்பி நிற்பதைப் பார்த்ததும் கோமுவுக்கு என்னவோ போலிருக்கிறது.

'எத்தனை சிரமப்பட்டு வளர்த்தேன்?…'—ஒரு பெருமூச்சு.

கோமு, அதற்குமேல் அந்த அவரைக் கொடியைப் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. குடிசைக்குள் நுழைகிறாள்; மருந்தை கலந்து பையனுக்கு கொடுத்துவிட்டு நிமிர்கிறாள்…

“கா…பி. ஆத்தா…”—பையன் காபி கேட்கிறான்.

“இதோ போட்டுக் கொண்டாரேன் ராஜா.” என்று சொல்லிவிட்டு அடுக்களைக்கு ஓடுகிறாள். அங்கு—

காபித் தூள் மட்டுமே இருக்கிறது.

சர்க்கரை?

—வாங்க வேண்டும்.

“டேய் சங்கு…சாமு…”-கோமு பிள்ளைகளைக் கூப்பிடுகிறாள், சர்க்கரை வாங்கி வரச் சொல்ல.

யாரும் வரக்காணோம்.

“டீ பொட்டைகளா…”-பிள்ளைகள்தான் எங்கோ தொலைந்துவிட்டன என்றால் பொட்டைகளையும் காணோம்.

“சனியன்கள் எங்கு தொலைந்தன…” கோமு முணுமுணுத்துக் கொண்டே திரும்பி, “டேய் பொடியா…” என்று பலக்கக் குரல் கொடுக்கிறாள்.

எதிர்த்த குடிசைப் பொடியன் ஓடிவருகிறான். “இந்தா… போயி பத்து காசுக்கு சர்க்கரை வாங்கிட்டு ஜல்தி வா பார்க்கலாம்! “என்று பொடியனை விரட்டுகிறாள். பொடியன் கடையைப் பார்க்க ஓடுகிறான்.

கோமு மீண்டும் குடிசைக்குப் பின்புறம் வருகிறாள். எதைப் பார்க்கக் கூடாது என்று நினைத்திருந்தாளோ, அது—அந்தக் கருகிய அவரைக் கொடி—மீண்டும் அவளது கண்ணில் பட்டு அவளை சித்திரவதை செய்கிறது…

அதைப்பார்த்ததும் திடுமென்று ஓர் எண்ணம்— 'ஐந்தில் ஒன்று கருகிப் போய் விட்டால்தான் என்ன?'' என்று!…உடனே வாயில் அடித்துக் கொள்ளுகிறாள்.

“எப்படியும் பிழைத்துக் கொள்ளும்.” என்று, தனக்குத் தானே ஒரு முறை சொல்லி சமாதானப் படுத்திக்கொண்டு குடிசைக்குள் வருகிறாள். பொடியனும் வந்து நுழைகிறான்.

“சர்க்கரை வாங்கிட்டியா?”

“வாங்கிட்டேன்; இந்தா”—பையன் சர்க்கரையைக் கொடுத்துவிட்டு குடிசைக்குப் பின்புறம் போகிறான், அவரைக் கொடியைப் பார்க்க. அவனுக்கு அது ஒரு பொழுது போக்கு.

அழகான அந்த அவரைக் கொடியைப் பார்த்துக் கொண்டே வருகையில், அந்தக் 'கருகிய கொடி' பொடியன் பார்வைக்குத் தப்பவில்லை.

“இந்தக் கொடிக்குப் போய் ஏன் தண்ணீர் ஊற்றுகிறாள்…?” என்று நினைத்தவனாய், பொடியன் கொடியைத் தொடவும், குடிசைக்குள் காபியை இறக்கப் போன கோமுவின் கையில் நெருப்பு சுடவும் சரியாக இருந்தது.

வெடுக்கென்று கையை உதறி வாயில் வைத்து சூப்பிக்கொண்டிருக்கையிலேயே, “கோமக்கா… கோமக்கா…” என்று பொடியன் குரல் கொடுக்கிறான்.

“இருடா” என்று சற்றுச் சலிப்புடன் பதில் குரல் கொடுத்துவிட்டு, கோமு காபியுடன் பையனிடம் வருகிறாள்.

களைத்துப் படுத்திருக்கிறான் பையன். கண்ணை மூடி இருக்கிறான்; தூக்கமல்ல.

“பிழைப்பானா?” — பையனைப் பார்த்ததும் கோமுவின் சிந்தனை விரிகிறது…உடனே அதைக்கட்டுப் படுத்திக் கொள்கிறாள்.

(14-ஆம் பக்கம் பார்க்க.)

ஊழல் ஒரு தத்துவம்; காமராசரின் விரிவுரை!

ஊழல் - ஊழல் - எங்கு பார்த்தாலும் ஊழல் என்று இப்போது ஊர்தோறும் பேசும் காமராசர்- அவர் ஆட்சியிலிருந்தபோது-அவரது கட்சி சிம்மாசனத்தில் இருந்தபோது - என்ன பேசினார் என்பதை ஆதாரத்துடன் கீழே தருகிறோம்.

காமராசர் பல்வேறு கூட்டங்களில் பேசிய பல்வேறு பேச்சுகள் சமதர்மம் என்ற தலைப்பிலும், 'சங்கநாதம்' என்ற தலைப்பிலும் புத்தகங்களாக வெளியிடப் பட்டுள்ளன. அவற்றிலிருந்தே கீழ்க்கண்ட பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன.

பணக்காரர்கள் லஞ்சம் கொடுத்து தங்களுக்கு வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு. பிறகு அவர்களே லஞ்ச ஊழல் ஏற்பட்டு விட்டது என்று கூறுகிறார்கள். ஏழைகளை வளர விடாமல் தடுத்துத் தாங்களே வாழ வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு இம்மாதிரி கூச்சலிடுகிறார்கள்.

(சமதர்மம் ஏடு பக்கம் 33,)

லஞ்சமும் ஊழலும் ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல; பொதுப் பிரச்சினையாகும்! உத்தியோகம் பார்ப்பவர்களிடம் "மேல்வரும்படி என்ன?" என்று கேட்பது சம்பிரதாயமாகவே இருந்து வருகிறது.

(சங்கநாதம்—பக்கம்—73)

வசதி படைத்தவர்கள் தங்களுக்கு மேலும் வசதி தேடிக்கொள்ள இலஞ்சம் கொடுத்து ஊழலை வளர்க்கிறார்கள். இந்த ஊழலை வளர்த்துவிட்டு அதை நீக்கவில்லையே என்று அவர்கள் குறை கூறுகின்றனர்,

(சமதர்மம் பக்கம்—34.)

காங்கிரஸ் அரசாங்கம் வந்தவுடன் ஊழல் வந்துபுகுந்து விடவில்லை. அது 5,000 ஆண்டுகளுக்குமுன்பிருந்தே இருந்து வருகிறது.

(சமதர்மம் பக்கம்—35)

பத்து ரூபாய் லஞ்சம் கொடுத்து விட்டு பின்னர் 'லஞ்சம் ஒழிக' என்று கூப்பாடு போடுவதால் பயனில்லை.

(சங்க நாதம் பக்கம்—74,)

பணச்செருக்கினால் லஞ்சம் கொடுப்பவர்களை நாம் கண்டிக்க மறுக்கிறோம். அப்பாவி ஏழை வாங்கினால் "லஞ்சம், லஞ்சம்" என்கிறோம்.

(சமதர்மம் பக்கம்—35.)

லஞ்சம் என்று சொல்லுகிறார்கள்; அது எல்லா நாட்டிலும் இருக்கிறது. நம் நாட்டிலும் தொன்று தொட்டு வேர் ஊன்றி இருக்கிறது.

(சங்கநாதம் பக்கம்—103)

லஞ்சம், ஊழல் என்று பரவலாகப் பேசப்படுகிறது. லஞ்சம் ஓரளவு இருக்கலாம்.
முன்பு ஐம்பது அல்லது நூறு பேரிடம் பணம் கொடுக்க சக்தி இருந்தது.
இப்போது நிறையப் பேரிடம் பணம் புழங்குகிறது. இதுவும் லஞ்ச ஊழலுக்கு ஒரு காரணம்.

(சமதர்மம் பக்கம்—35.)

நாட்டில் காணப்படும் லஞ்ச ஊழல்களை எல்லாம் அரசாங்கம் மட்டும் ஒழித்துவிட முடியாது. பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

(சமதர்மம் பக்கம்—36.)

உயர்ரகத் தலைவர்களிடமே லஞ்சப் பழக்கம் அதிகம்.

(சமதர்மம் பக்கம்—37.)

லஞ்சம் — லஞ்சம் என்கிறார்கள்; மாமன் கொடுக்கிறான்! மச்சான் வாங்கிக் கொள்கிறான்,
கொடுப்பதும் அவர்கள்; வாங்குவதும் அவர்கள். அப்படியிருக்க ஏழை மக்களை ஏமாற்றக் கூச்சல் போடுகிறார்களே!

(சமதர்மம் பக்கம்—40.)

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்